
# வடவை மாதா குரலொலி

ஆண்டிதழ்

ஆசிரியர்: மு. சேவியர் சந்திரகுமார்



ஆகஸ்ட் : 2022

குரல்: 27; ஒலி:1

விலை : ரூ.15/-

வாழ்த்துகிறோம்...!

# Institute of Community Development Services (ICDS)

Mobile : 73583 35269 I 98845 38281

email: icdsxavier@gmail.com I Web:www.icdsngo.com

#1/461, Pillaiyar Koil Street, Kelambakkam Post,

Chengalpet Dist., Pin :603 103, T.N.











## வடவை பரி. திருக்குடும்ப ஆலய 150வது ஆண்டு விழா சிறப்பிதழ்

ஆசிரிய உரை

ஒவ்வொரு வருடமும், ஒரு மாத முன்னரே, கருத்துக்களைச் சேகரித்து, அதன்பின் எழுதலாமென்று நினைப்பது வழக்கம்.
எனது பிற வேலைப்பழு போன்ற காரணங்களால் எப்போதுமே இது சாத்தியப்படுவதில்லை.
யாரோ என்னை எழுதச்சொல்வது போன்ற உணர்வு, எழுதுவதற்கான ஆரம்ப சுழியைப் போடும் அந்த நொடியிலிருந்துதான் ஏற்படுகிறது.!
இதுதான் நடந்த சில வருடங்களில் வெளிவந்த குரலொலி உருவான வரலாறு.
அதுபோலவே இவ்வருடமும் குரலொலி உருவானது.
இவ்வருட குரலொலியை சுத்த மனதுடன் வாசிப்பவர், இறைவனின் கரம் எழுத்துக்களில் இருப்பதை நிச்சயம் உணர்வான்.
அதுதான் இதுபோன்ற வெளியீடுகளின் உண்மையான வெற்றி !!

\- மு. சேவியர் சந்திரகுமார்


| | | |
|---|---|---|
| 1. 150ஆண்டு விழா காணும் வடவை ஆலயம் .................... | பக்கம் | -2 |
| 2. புனிதரானார் மண்ணின் மைந்தர் தேவசகாயம். ................. | பக்கம் | -9 |
| 3. ஞாயம் தீர்த்த இயேசுவின் இரத்தம் .................................. | பக்கம் | -16 |
| 4. வாசல் திறந்தது ................................................................ | பக்கம் | -20 |
| 5. இறைவனின் வழி நடத்துதல் பற்றிய அனுபவம்................. | பக்கம் | -28 |
| 6. அதிசயம் நிறைந்த புனிதர் கூட்டம்...................................... | பக்கம் | -33 |
| 7. இயேசு உயிர்த்தது ................................................................ | பக்கம் | -39 |
| 8. உக்ரைன் போர் ஓர் எச்சரிக்கை........................................... | பக்கம் | -43 |

ஓவியர் மணி.


# வடவை மாதா குரலொலி

ஆகஸ்ட் - 2022

ஆசிரியர்:

**மு. சேவியர் சந்திரகுமார்**

ஆசிரியர் குழு உறுப்பினர்:

**டி.எம். ஜேம்ஸ் மார்ட்டின்**

மற்றும் பலர்

வடிவமைப்பு: **ஓவியர்மணி.**

அச்சகம்:

**ஜே.எம். பிராசஸ், சென்னை**

வெளியிடுபவர் மற்றும் ஆசிரியர்:

**எம். சேவியர் சந்திரகுமார்**

1/448,பிள்ளையார் கோவில் தெரு,

கேளம்பாக்கம்-603 103.

செங்கல்பட்டு மாவட்டம்

தொலைபேசி:

73583 35269 / 98845 38281

மின்னஞ்சல்:

icdsxavier@gmail.com

இணையதளம்:

www/vadavaimadhakuraloli.com


***கை***யில் தவழ்கிறதே, இதே புத்தகம் ஒரே நாளில் அச்சிட்டு வெளியிட முடியும் என்றால் அது ஜே.எம்.பிராசஸ் அதிபர் திரு. அலி முகமது சையத்...!

மூன்றே நாளில் இதன் வடிவமைப்பை இராப்பகல் பாராது செய்ய முடியுமென்றால் அது ஓவியர் மணி...!!

ஒரே நாளில், வடக்கன்குளம் முழுவதும் மொத்த புத்தகங்களையும் விநியோகிக்க முடியுமென்றால் அது திரு. அருள்ராஜ்...!!!

இந்த மூவர்குழு இல்லையென்றால் குரலொலி வெளிவருவது சிரமம்தான். இவர்களை கடந்த சுமார் பன்னிரண்டு வருடங்களாக எனக்கு அடையாளம் காட்டிய மற்றும் இந்த 27வது குரலொலியை வெளியிடச் செய்த வடவை பரலோகமாதாவுக்கு நன்றி.

– ஆசிரியர்



# 150 வது ஆண்டு விழா காணும் வடவை திருக்குடும்ப தேவாலயம்..!


உலக வரலாற்றைச் சொல்ல ஆரம்பிக்கும் பொழுது ஆதாம் ஏவாளிலிருந்து எவ்வாறு ஆரம்பிக்கின்றோமோ அது போன்றே வடவை வரலாற்றைச் சொல்லும்பொழுது சாந்தாயி அம்மையாரிடமிருந்து ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது.

இப்பொழுதிருக்கும் வடக்கன்குளத்துக்கும் அந்தக்கால வடக்கன் குளத்துக்குமுள்ள மிகப்பெரிய வித்தியாசம் அன்று செழுமை பூத்துக் குலுங்கியது. இன்று வீடுகளால் நிரம்பியிருக்கும் இடமெல்லாம் அன்று காடாக, மரங்களாக அதன் நடுவில் சிறு குடிலில், தன்னந்தனியாக தனது கணவரான ஞானமுத்து நாடாருடன் வாழ்ந்து வந்தவர்தாம் இந்தச் சாத்தாயி!

ஒரேயொரு ஊரில், ஒரேயொரு குடும்பமாக இருந்த இவர்கள், ஒரேயொரு குருசடி அமைத்து வழிபட்டு வந்ததுதான் இவர்களது பக்திக்கதைக்கு ஆரம்பமாக இருந்தது!

அந்தக் காலத்தில் அணைக்கரை பங்கு நோக்கி கொச்சியிலிருந்து குதிரையில் வந்த சாமியார், நமது சாந்தாயி அம்மையார் அவரைப் பார்த்து, நெடுஞ்சாண் கிடையாக காலில் விழுந்த சாந்தாயி (அந்தக்காலத்தில் அவ்வளவு பக்தி) தனது குடிசை வாழ்க்கையைச் சொல்ல சாமியார் விஜயம் இவ்வாறு ஆரம்பித்தது. அப்புறம் என்ன? ஜெபக்கூடம் அமைக்கப்பெற இந்தக் குட்டிக் குடும்பம் சாமியாரால் மந்திரிக்கப்பட்ட இந்த இடத்தில் இறைவனைத் தொழுவதை தொடர்ந்தனர். இந்த அம்மையாரும் சும்மா இருக்கவில்லை அருகிலுள்ள ஊர்களைத் தேடி (காடுகளையும் மலைகளையும் கடந்து ) அலைந்து, ஆங்காங்கிருந்த இந்துக்களைக் கண்டு பேசி, இறைவன்






பாதத்தில் மனந்திருப்ப ஆரம்பித்தார். அவர்களையும், ஒவ்வொன்றாக தனது குடிசைக்குப் பக்கத்தில் குடியேறச் செய்ய, இப்படியாக வடக்கன் குளம் உருவாகியது.

முத்தாலபுரம், பட்டாபுரம், சொக்கநாதபுரம், ராமலிங்க புரம், பெருங்குடி போன்ற சிற்றூர்களும் சுற்றிலும் வரவே, இப்படியாக வளர ஆரம்பித்தது.

ஜான் பிரிட்டோ சாமியார் 1685 ம் வருடம் ஒரு சிறு கோவிலைக் கட்ட, சேவியர் போர்கிஸ் சாமியார், இதை காமநாயக்கன்பட்டி பங்கில் சேர்க்க,



சரித்திரம் களை கட்டியது!

அப்பொழுது, பெருங்குடி ஊரிலிருந்து இந்துக்களும் வடக்கன் குளத்திலே குடியேறிய இந்துக்களுமாக கூட்டுச் சேர்ந்து கொண்டு, கிறிஸ்தவர்களை கொடுமைப்படுத்த, விசுவாசத்துக்கு முதல் சோதனை வந்தது!
அறுபது ஆண்டுகள் உருண்டோடின சேர்ந்திருந்த வடக்கன் குளத்தின் அப்போதைய ஜனத்தொகை சுமார் நான்காயிரம் பேர். அப்போதைக்கு ஞானஸ்தானம் பெற்றவர்கள் சுமார் நூறு பேர்

டீசா சாமியார் பங்கு பொறுப்பேற்க மதக்கலவரம் ஊர் பெரிய மனிதரின் ரூபத்தில் வந்தது. . விளையாட்டுதான் அதனை மீண்டும் கட்டினார். சாமயார்.

இன்றும் வடக்கன்குளம் கோவிலிலுள்ள பிரத்தியேப் பெட்டகத்தில் பாதுக்காப்படுகிற தலைப்பாகை அன்று (1745) வாழ்ந்த வேதசாட்சியான தேவசகாயம் பிள்ளையினுடையது இவர் வடக்கன் குளத்தில் தான் ஞானஸ்தானம் பெற்றார். இவரது மனைவி ஞானப்பூவும் 14 வருடங்கள் வடவையில் இருந்து, இறந்த அந்தக் கல்லறைக்கு இன்றும் திருவிழா நேரங்களில் மின் விளக்கு அலங்காரம் செய்து அழகு பாரக்கிறார்கள் வடக்கன்குளம் மக்கள்.

திருக்குடும்ப கோவிலை 1749ல் பட்டதாரி சுவாமிகள் புதுப்பிக்க 1952 ல் தாமஸ்னி சாமியார் மேற்கொண்டு கட்டி முடித்தார்.
1803 ஆம் வருடம் வடக்கன் குளத்தில் வாழ்ந்து வந்த பில்பக் என்ற ஐரோப்பியரை பார்க்கும்படி திருநெல்வேலி யிலிருந்து வந்த சவரிமுத்துப்பிள்ளை கோயிலில் ஜெபம் செய்து கொண்டிருக்கும் போது அந்த அதிசயம் நடந்தது.
மாதா சுரூபம் கைகள் விரிக்க, கண்ணீர் தாரை தாரையாக சொரிய, கோயில் மணிகள் அடிக்கப்பட்டன! பக்தர்கள் திரளாக கூடி அழுது ஜெபிக்கவே காட்சி மாறியது.

1824ஆம் ஆண்டு வெள்ளாளரும் முதலிமார்களும் கூட்டணியமைத்து அப்போதிருந்த மிராண்டா சாமியாரை பகைத்துக் கொள்ள குழப்பம்பிறந்தது. குழம்பியவர்கள் பிராட்டடஸ் டாண்டாகமாறிச் சென்று விட்டனர்.

இப்பொழுது வானளாவ உயர்ந்திருக்கும் கோயில் எப்போது கட்டப்பட்டது. தெரியுமா? 1855 ம் வருடம் கிரகோரி சாமியார் காலத்தில் ஆரம்பித்த வேலை 17 ஆம் ஆண்டு கழித்து 1872ஆம் ஆண்டு கலைப்பொலிவுடன் வானளாவ வளர்ச்சியுறும் நிலையில் கட்டி முடிக்கப்பட்டது. இன்றைக்கு 150 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் பெருமுயற்சியால் பல லட்சங்களாக வசூலிக்கப்பட்டு, புத்தம்புது பொலிவுடன் தலை நிமிர்ந்து நிற்கிறது, வடவை மாதா ஆலயம்.

1875 ஆம் வருடம் மீண்டும் கலவரம் இப்போது நாடாருக்கும் வெள்ளாளருக்கும் கேனோஸ் சுவாமிகள் இவர்களுள் பலரை சமாதானப்படுத்தினார். சமாதானத்தை விரும்பாதவர்கள் கலங்கிய குட்டையில் மீன்களாகத் தவிக்க,வேற்று மதத்தவர்கள் இவர்களை வலைபோட்டுக்பிடித்தார்கள்.

1907 ஆம் ஆண்டு முதல் ஒருவர் பின் ஒருவராக கௌசானல், இஞ்ஞாசியார், மரியதாஸ், சுவக்கீன் பெனடிக்ட், நவமணி, மரியஞானம், குருசந்தோணி ஜோசப் டி ரோஸ் மரியதாஸ், ஜோப் டி ரோஸ், தியோபிளஸ், பன்னீர் செல்வம், நெல்சன் பால்ராஜ், ததேயூஸ் ராஜன் என்று குருவானவர்களின் பட்டியல் நீண்டு இன்றைக்கு ஜான் பிரிட்டோ அடிகளார் பங்குக்குருவாக இருக்கின்றார்.

# வடவைப் பங்கின் சமுதாய ஆன்மீகப்

அன்றைக்கும் சரி இன்றைக்கும் சரி, இந்திய வரலாற்றில், கிறிஸ்தவ மிஷனரியின் பங்கு மிகப்பெரியது என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர்.

வடவையின் சரித்திரத்தில் கூட இது மிகவும் உண்மை.

வடவையின் முதல் உயர்நிலைப் பள்ளியை இஞ்ஞாசியார் சுவாமிகள் கட்டினார்.

ஆலயம் செய்வது சாலவும் நன்று என்ற மூதுரைப்படி சங் சுவக்கீன் தன்னுடைய காலத்தில் அந்தோனியார் கோவிலை நிர்மாணித்தார். திருக்குடும்ப கோவிலைச் சுற்றி சுவர்களைக்கட்டியவர் சங், பெனடிக்ட்.

இன்றைக்கும் புகழ் பெற்ற மாதா கெபி, சங். நவமணி அடிகளார் பங்குத் தந்தையாக இருந்தபோது கட்டப்பட்டது

சங். மரிய ஞானம் சுவாமிகள் நூற்றாண்டு விழாவின் போது மராமத்துப் பணிகளைச செய்ததோடு கல்லறைத் தோட்டத்தைச் சுற்றிலும் மதில் சுவரைக் கட்டினார்.

பக்தர்களும் கோவிலுக்குத் தேவையான ஒலி, ஒளிச்சாதனங்கள், இருக்கை வசதிகள், ஜெனரேட்டர், கோவிலின் முன்பிருக்கும் கலையரங்கம், மதிற்சுவரிலுள்ள கம்பி வேலைப்பாடுகள் என்று அன்றிலிருந்து இன்று வரை செய்து வருகிறார்கள்.

கோயிலுக்கு மக்கள் மக்கள் வாரி வழங்க ஆரம்பித்தது சங், மரியஞானம்



# கரம் விரித்து கண்ணீர் விட்ட மாதா...!

1803 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 ஆம் தேதி, வடக்கன் குளத்தில் குடியிருந்த பில்பக் என்ற ஆங்கிலேயரை பார்ப்பதற்காக திருநெல்வேலியைச் சேர்ந்த சத்திய வாசகம் பிள்ளையின் மகன் சவரிமுத்துப் பிள்ளை, உபதேசியார் வியாகப் பிள்ளை ஹெல்ரேட்டா பில்டர்பிக் என்ற ஐரோப்பிய மாது முதலியவர்கள் முற்பகல் 11 மணி அளவில் ஆலயத்தில் ஜெபித்துக் கொண்டிருக்கும் வேளையில் பீடத்திற்கு பின்னால் ஒரு முகம் தோன்றவும், மாதாவின் கண்கள் கண்ணீர் விட்டு கண்கள் வானத்தை நோக்கிய, முகம் துக்ககரமாகவும், இணைந்து ஒட்டி யிருந்த இருகரங்களும் விரிந்து, நீண்டிருந்த மணிகள் தானாக ஒலிக்கவும், கண்டவர்கள் அதிசயமடைந்து திகைப்புற்றனர்.

ஹெல்ரேட்டா பில்டர்ப்க் ஓடிப்போய் மாதாவின் கண்களை துடைத்தார். கண்ணீர் நின்ற பாடில்லை! மக்கள் மணி சத்தம் கேட்டு திரண்டனர். அனைவரும் பிரம்பிப்படைந்து முழந்தாளிட்டனர். அனைவரும் கைகளை விரித்து பொறுத்தருளும் கர்த்தாவே சொல்லி, அழுது எங்கள் பாவங்களை மன்னியுங்கள் என்று மன்றாடி ஜெபித்ததுமே, மாதாவின் கரங்கள் பழைய படி இணைந்து சுயரூபம் அடைந்தது. மாதா புன்சிரிப்புடன அழகு சின்னமாக இப்போது தோற்றமளிக்கிறாள் கிறிஸ்தவர்களுக்கு புற மதத்தவர்களாலும், மற்றவர்களாலும், வரும் துன்பங்கள் மற்றும் உலக பாவங்களையும் நினைத்து உருகியே கண்ணீர் வடித்தாள் தாய்.

# பணிகள்

அடிகள் காலத்தில் தொடங்கி அதன்பின்னர் வந்த குருசந்தோணி, பீட்டர் ராஜா, ஜோப் டி ரோஸ், இருதயராஜ், மரியதாஸ், ஜான் பிரிட்டோ அடிகளார் வரை, தொடர்ந்து நடந்து வருகிறது.

சங் ஜோப் டி ரோஸ் கல்யாண மண்டபம் ஒன்றை முடிந்த அளவுக்கு கட்டி முடித்தார். சங் இருதயராஜ் அடிகள் மௌன மடத்தை அடுத்த அமலிவனத்தை செப்பனிட்டு, புதிய

வசதிகளை ஏற்படுத்தி ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தை ஆரம்பித்தார்.

முன்னதாக ஆரம்பிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் குறிப்பிடத்தகுந்தவை. தூய தெரசாச ஆரம்பப் பள்ளி, திருக்குடும்ப நடுநிலைப்பள்ளி, பத்திநாதபுரம், புனித ஆசிர்வாதப்பர் ஆரம்ப பள்ளி, ஆவரைகுளம் புனித சவேரியார் ஆரம்ப பள்ளி, கீழ்குளம் புனித சூசையப்பர் ஆரம்பப் பள்ளி ஆதியவையாகும்.

தொழிற்கல்வியைப் பொறுத்த அளவில், பட்டுப்பூச்சி வளர்ப்பு தொடங்கி, தண்ணீரும் நீண்டாதே விண்ணொளித் தீப்பெட்டி, வரை பலவிதமான தொழில்முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

ஓசானம் தையற் பயிற்சிப் பள்ளியாகட்டும், பெத்தனி சகோதரிகளின் புனித தாமஸ் ஆஸ்பத்திரியாகட்டும் அனைத்தும் வடவையின் சமூகத் தொண்டுக்குச் சான்றாகும். பிஷப் அம்புரோஸ் பஸ் ஸ்டாண்ட் மற்றும் குடி, நீர் வசதி போன்றவையும் கிறிஸ்தவத்துக்கு பெருமை சேர்ப்பதாகும்.

ஊருக்கு வெளியே அமையப்பெற்ற மௌன மடத்தின் மூலம் ஆற்றப்பட்ட சமுதாய மற்றும் ஆன்மீகப் பணிகள் ஏராளம்.

மாதா ஆலயத்தின் 125ஆம் ஆண்டு விழாவையொட்டி கோயிலுக்குள்ளே மேல்தளத்தில் ஏற்பட்டிருந்த அனைத்து விரிசல்களும் சரி செய்யப்பட்டு உள் விதானங்கள் சுவர்களனைத்திலும் அழியும் நிலையிலிருந்த வண்ண ஓவியங்கள் மீண்டும் தீட்டப்பட்டு பல லட்சம் செலவில் மாதா ஆலயம் புத்துயிர் பெற்றிருக்கின்றதென்றால் அதன் பெருமை அன்றைய பங்குத் தந்தை மரியதாஸ் அடிகளாரையே சாரும்.



அதன்பின் வந்தவர்கள் பல்வேறு பணிகளைச் செய்தார்களென்றாலும், நெல்சன் பால்ராஜ் பங்குத் தந்தையாக இருந்த போது சென்னை அருகிலுள்ள ஒருவரின் உதவியால் மாதா காட்சி கொடுத்த சிற்றாலயம் முற்றிலுமாக பழது பார்க்கப்பட்டு, தற்சமயம் புனிதராக உயர்த்தப்பட்டுள்ள புனித தேவசகாயத்துக்கு அதே கோயிலினுள்ளே மணி மண்டபம் அமைக்கப்பட்டு வடக்கன் குளம் வரலாற்றை தெரிவிக்கும் வண்ண காட்சி பலகைகள் ஆங்காங்கே பொறுத்தப்பட்டன.

அருட்திரு.ததேயுஸ் ராஜன் அவர்களால் பயணியர் மாதா குருசடி, மாதாவின் தேர் பதிக்கப்பட்டு, புது தோற்றத்துடன் சீரமைக்கப்பட்டது.

புதிய உத்வேகத்துடன் பள்ளிகளின் நிர்வாகம் உட்பட சகலத்தையும் காலச்சூழ்நிலைப்படி அமைத்துவருகிறார் இப்பாது பங்குத்தந்தை ஜான் பிரிட்டோ!


# தேவசகாயம் புனிதரானதற்கு நன்றி செலுத்திய வடவை மக்கள்...!

வடவை மாதா விண்ணேற்றத் திருவிழாவுக்கு எப்படிப் பட்ட உற்சாகத்துடன் மக்கள் கூடுகிறார்களோ, அதே போன்ற குதூகலம் தான், அன்றைய தினம் வடவை மக்களுக்கு ஏற்பட்டது.

மண்ணின் மைந்தர் புனிதரான பின்பு கேட்கவா வேண்டும்?

வடவை சரித்திரத்திலேயே ஐந்து ஆயர்கள் கலந்து கொண்ட மாபெரும் நிகழ்ச்சி, இதுவாகத் தானிருக்கவேண்டுமென்றே கூறலாம்.

இரண்டு மாவட்டங்களிலிருந்து, குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து, ஏராளமானவர்கள் தமது குடும்ப சகிதமாக, அந்த விழாவில் கலந்து கொண்டது மெய்யாகவே சிறப்பான அம்சமாகும்.



போப்பாண்டவர் புனதர் வாங்கிய அரங்கில் புனித தேவசகாயம் படம்

மட்டமல்லாது மண்ணின் மைந்தரே தமிழக சபாநாயகராகி அதுவும் வடக்கன்குளத்திற்தே வருகை தரும் போது ஏற்படும் மகிழ்ச்சி கூடுதலானதே! நல்லதொரு ஆசானாக, பெரியவராக, பழுத்த அனுபவம் கொண்ட வண. தமிழக சபாநாயகர் அப்பாவு நிகழ்ச்சி முழுவதும் கலந்து கொண்டது, அன்னார் மக்கள் மீது கொண்ட பற்றையே பறைசாற்றியது.

தூத்துக்குடி ஆயர் மேதகு ஸ்டீபன் அந்தோணி கலந்துகொண்டு இறைச் செய்தியை கொணர்ந்த விதத்துக்காக இறைவனுக்கே நன்றி!

விழா ஏற்பாடுகளை வடக்கன்குளம் பங்குத் தந்தை அருட்திரு. ஜான்பிரிட்டோ மற்றும் உதவிப் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள் மற்றும் பக்த சபைகள் செய்திருந்தது வடக்கன்குளத்தின் பெருமையை மேலும் பன்மடங்கு உயர்த்திக் காட்டியது.



தமிழக சபாநாயகர் அப்பாவு





சிறப்பு செய்த பங்குத்தந்தை ஜான் பிரிட்டோ



மேதகு ஸ்டீபன் அந்தோணி










# எந்த நாட்டில் நடைபெறுகிறது.





**கை**தியாக பிடிப்பட்டவன் உடைகளைக் கழற்றி ஒரு அடி அகலமேஉள்ள துண்டு மட்டும் அணியப்படுகிறது, அவன் வெட்கி தலைகுனிய வேண்டுமென்று...!

சுற்றிலுமுள்ளவர்கள், வசைபாடுகிறார்கள், கையில் அறைகிறார்கள்.!

உடலெங்கும் மிளகாய்த்தூள் பொடியை பசையாக்கித் தடவுகிறார்கள்.!

பின்புறத்தில் பிரம்பால் அடித்து ஏற்படுகின்ற காயத்திற்கு மருந்து என்ற போர்வையில் மிளகாய்த் தூளைத் தடவுகிறார்கள். கைதியானவன் வலியால் துடிப்பதைப் பார்த்து, பார்ப்பவர்கள் சந்தோஷப்படுகிறார்கள்!

எருமைமாடு ஒன்றில் ஏற்றி பின்னோக்கி உட்கார வைக்கப்பட்டு, சுற்றிலும் பறையொலி முழங்க, ஊர்வலமாக தெருக்களில் செல்ல வைக்கிறார்கள்!

கொடுவெயிலில் வெறுங்காலோடு, நிற்க வைக்கிறார்கள். பள்ளங்களில் கீழே தள்ளி உருட்டி விடுகிறார்கள்!

கரும்புள்ளி செம்புள்ளி உடல்முழுவதும் குத்தப்பட்டு கைகள், பிற்புறமாக கட்டப்பட்ட நிலையில், கழுத்தில் எருக்கம்பூ மாலை அணிவிக்கிறார்கள்!

நாள் முழுவதும் இவ்வாறு அசிங்கப்படுத்தி இம்சைப்படுத்தி மாலையில் நான்கு அடி உயரம் 2 அடி அகலம் கொண்ட பொந்தில் தள்ளி இரவு முழுவதும் அடைத்து வைக்கிறார்கள். இதுதான் கைதியின் சிறைச்சாலை!

இவ்வாறு 16 நாள் தொடர்ந்து செய்கிறார்கள். இதுமுதல் கட்ட தண்டனை!

கைதி, மன்னிப்புக் கேட்டு அதிகாரிகள் கூறுவதை ஒத்துக் கொண்டால், விட்டு விடுவார்கள் தவறினால் இதே தண்டனை தினமும் கொடுக்கப்பட்டு மாதக் கணக்கில் நீடிக்கும்.

**எந்த நாட்டில் இந்த சித்திரவதை நடைபெறுகிறது!**



வில்வித்தை, வர்ம கலைகள், சமஸ்கிருதம் மற்றும் போர் ஆயுதங்களைப் பயன்படுத்தும் முறை அனைத்தையும் கற்றுத் தேர்ந்தார்.

கிறிஸ்தவர்களாக மாறியவர்களுக்கு இவைகளில் ஒரு சில தண்டனைகள், ஆளுக்குத் தகுந்த படி குறைத்தோ, கூட்டியோ கொடுக்கப்படும்.

ஆனால் இவை அனைத்தையும் ஒருசேர அனுபவித்தவர்தாம் தேவசகாயம் என்ற நீலகண்டபிள்ளை!

அப்படியென்ன குற்றம் செய்து விட்டார் இந்த நீலகண்டபிள்ளை?

கிறிஸ்துவ மதத்துக்கு அதுவும் கத்தோலிக்க கிறிஸ்துவ மதத்தில் சேருமுகமாக வடக்கன்குளம் வரை சென்று அங்குள்ள சாட்சாத் நமது வடவை மாதா ஆலயத்திற்குச் சென்று ஞானஸ்நானம் எடுத்தார் நீலகண்ட பிள்ளை!

இதுதான் இந்த தண்டனைகளுக்கான பெருங்குற்றம்!

அவரை அரை நிர்வாணப் படுத்தி அவருக்கு தொடர்புடைய ஊர்கள் மட்டுமல்லாது க த் தோ லி க் க கிறிஸ்தவர்கள்








புனித தேவ சகாயத்துக்கு தான் இவையனைத்தும் நடைபெற்றது!

கத்தோலிக்கக் கிறிஸ்தவராக மாறிவிட்டார் என்பதால் இந்தத் தண்டனை!

இப்படியொரு தண்டனை ஆப்பிரிக்கக் காடுகளில் வசிப்பவர்களோ, மலைவாழ் பழங்குடி இனைத்தைச் சார்ந்தவர்களோ, வாழும் நாடுகளில்கூட கிடையாது.

ஆனால் அவைகளையெல்லாம் மிஞ்சும் வகையில் தமிழ்நாட்டில் அதுவும் கன்னியாகுமரி மாவட்டத்தில் தான் இந்த சம்பவங்கள் நடைபெற்றன.

தேவசகாயத்தின் இயற்பெயர் நீலகண்டபிள்ளை 1712 ஆம் ஆண்டு கன்னியாகுமரியைச் சேர்ந்த நட்டாலம் என்ற கிராமத்தில் பிறந்தார். நாயர் என்ற உயர் வகுப்பைச் சேர்ந்த இவர் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் மன்னரான மார்த்தாண்ட வர்மாவிடம் பத்மநாபுரம் கோட்டையில் கருவூல அதிகாரியாக பணியில் சேர்ந்தார்!


வடக்கன்குளத்தில் ஞானஸ்தானம்

குடியிருக்கும் பிற ஊர்களுக்கும், எருமை மீது ஏற்றி துன்புறுத்தினால் அம்மதத்தை விட்டு விலகி விடமாட்டாரா என்று யோசித்ததன் விளைவே இந்த சித்திரவதைகள்!

எதற்கும் மசியாத நீலகண்டன் தவறு லாசர் என்ற இந்த தேவசகாயத்தை வேறு ஏதாவது வழிகள் மூலம் மாற்றி விடலாமா என்று யோசித்தார்கள் மன்னரின் அடியாட்கள்!

அதன் விளைவு...!

அன்று இவர்கள் படுத்திய பாட்டில் இன்று, புனிதரானார் தேவசகாயம்!!

எப்படி என்பது தான் கீழே விவரிக்கப் படுகிறது.

பொதுவாக, புனிதர் பட்டம் வழங்குவதற்கு முன் அவருக்கு முத்திப்பேறு பெற்றவர் என்ற பட்டமும் அதற்கு முன்பு அருளாளர் பட்டமும் வழங்கப் பட வேண்டும். புனித தேவசகாயமும் இவ்வாறான படிகளையெல்லாம் கடந்த பின்னர் தான் புனிதர் பட்டம் பெற முடிந்தது!

அதாவது, அவர் மூலம் இறைவன் இயேசுவிடம் பெற்ற அதிசயமான பலவற்றை விசாரிக்க பல்வேறு குழுக்கள் அமைக்கப்பெற்று, பலவிதமான சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டு மேற்படி குழுக்களால் இறுதி அறிக்கை பெற்றபின்னர்தான் ஒருவர் புனிதர் ஆக முடியும்.

மே மாதம் 15ஆம் தேதிதான் ரோமிலுள்ள வத்திக்கான் தேவாலய வளாகத்தில், போப்பாண்டவர் பிரான்சிஸ் இவருக்கு புனிதர் பட்டம் வழங்கினார்.

இவ்வாறான இந்த புனிதர் பட்டம் தேவசகாயத்துக்கு 300 வருடங்கள் கழித்தே கொடுக்கப்பட்டது.

இவர் பிறந்த ஊரான நட்டாலம் இன்று புனிதத் தலமாக மாறிவிட்டது!

அதுபோல இவர் கொல்லப்பட்ட ஆரல்வாய் மொழியின் காற்றாடி மலையும், புனிதத் தலமாகி, இங்கு நடக்கும் திருவிழாவுக்கு இலட்சக்கணக்கில் மக்கள் குவிகிறார்கள்.


அவர் பட்ட பாடுகள் தான் என்ன?


ஊர் நடுவேயுள்ள பட்டுப்போன புளியமரத்தில் இரு கைகளையும் மரத்தோடு கட்டி வைத்து, அனைவரும் பார்த்து ஏளனம் செய்ய ஏற்பாடு செய்தார்கள்!

இந்த சித்திரவதை பல மாதங்களாக தொடர்ந்து நடந்தது!









மூன்று வருடங்களாக சிறையில் அடைத்த இந்த கூட்டம். ஒருநாள் கூட அவரைக் குளிக்க விடவில்லை என்பது கூடுதல் செய்தி...!!.

அப்படியும் அசைந்து கொடுக்கவில்லை இந்த மாவீரர்

பிராமணரான விஸ்வநாதன் நம்பூதிரிக்கும் தேவகியம்மா என்ற நாயர் குல தாயாருக்கும் பிறந்து, சிவபெருமான் பெயரான நீலகண்டன் என்ற பெயரை வைத்துக் கொண்டவரா இப்படி வைராக்கியமாயிருக்கிறார்?

என்று வியந்தார்கள், இந்த வெறிபிடித்தவர்கள்!! பிராமணரும், நாயரும் சேர்ந்த உயர் குலத்தில் பிறந்து, அரசவையிலே பணியமர்ந்து, பூசாரியாக பணி செய்த அவரது தந்தைக்கு, கோயிலில் உதவி செய்து வந்த இவரா இப்படி?

பலவிதமாக சிந்தித்தார்கள் மன்னரின் அடிப்பொடிகள்.

மூன்று விதமான பணிகளை ஒரே சமயத்தில் பொறுப்பேற்றுச் செய்தவர் இந்த நீலகண்டபிள்ளை!

மன்னரின் சேனையிலே சிப்பாயாகவும், பத்மநாமபுரம் நீலகண்டசாமி கோயிலில் பணியாளராகவும் மன்னரின் மாளிகையிலுள்ள அரசு கருவூலத்தில் அதிகாரியாகவும் அழகு பார்க்கப்பட்டாரே அவருக்கா இந்த பிடிவாதம்?

லேசாக தட்டு தட்டினாலே தாம் சார்ந்த மதத்தை விட்டு ஓடிப்போகும் மனிதர்கள் நடுவிலே இப்படியா ஒருவர்?

இவ்வாறாக யோசித்தவர்கள் மன்னரிடம் சென்று புலம்பினார்கள். இனி இவரைக் கொல்லுவது ஒன்றே வழி என்று அதற்கான ஆணையைப் பிறப்பித்தார் மன்னர்!

மட்டுமல்லாது, அவர்களது ஆத்திரத்தைத் தூண்டிய சம்பவமும் நடந்தது.

எந்த மரத்தில் மாதக் கணக்கில் அவரது கைகளைக் கட்டி துன்புறுத்தினார்களோ, அதே பட்டுப்போன புளியமரம் ஒரே நாளில் நன்றாக துளிர் விட்டதே காரணம்!

இது மட்டுமா? அவரைப் பார்க்க வந்த நல்லமனங் கொண்ட பொதுமக்களின் குறைகளெல்லாம் நீங்கப்பெற்று, வியாதிகள் சுகமாகவே, அவரைப்பற்றிய புகழும் ஒரு புறத்தில் பரவ ஆரம்பித்தது!

கொடுமைப்படுத்தப்படும் வேளைகளிலே தாங்க இயலாத தாகம் ஏற்படும்போது, அவர்கள் கொடுக்கும் தண்ணீர் என்ன தெரியுமா உப்புகலந்த நீர்!! ஆனால் அவர்கள் அவ்வாறு கொடுத்தாலும், அந்த உப்பு நீர், நல்ல குடிநீராக மாறிய சம்பவங்கள் பலமுறை நடந்துள்ளது.

ஒரு தடவை, அவரை புலியூர் குறிச்சி என்ற இடத்திற்கு செல்லும் வழியில் அங்குள்ள மலைப்பகுதியில் தண்ணீர் வேண்டி கற்பாறையை கைகளால் தட்டியபோது அவர் தட்டிய இடத்தில் அற்புத நீரூற்று உருவாகியது! தாகம் தீர்க்க உதவியது!!

இன்று வரை அந்த நீரூற்று உள்ளது.

பொதுவாகவே அவருக்கு பசிக்கு மிகவும் குறைவான அளவிலேயே அரிசி சாதம், வழங்கப்படும்.

அதைக்கூட பல நாட்களாக அவருக்கு வழங்காமல் பட்டினியால் அவர் சாகட்டும் என்று விட்டு விடுவது வழக்கம். பெருவிளை என்ற ஊரில் இப்படிச்செய்து பார்த்தார்கள்.










புனித தேவசகாயம் தாகமிகுதியால் பாறையில் கையால் தட்ட ஏற்பட்ட அதிசய நீரூற்று


அவரோ உடல் நலத்துடன் நன்றாகவே இருந்ததைப்பார்த்து சலித்துக் கொண்டது அந்தக் கூட்டம்!!

இறுதி காலங்களில், அவர் உடல் முழுவதும், பருமனான சங்கிலிகள் கட்டப்பட்ட நிலையில் வேகமாக நடக்கச் சொல்லி வற்புறுத்தவே,– இறுக்கிக் கட்டப்பட்ட அந்தச் சங்கலிகளின் அழுத்தத்தால் சாஷ்டாங்கமாக விழுவதும், அதிலிருந்து மீண்டு எழும்போது அவரது பாதங்களின் மேலே கட்டப்பட்ட சங்கிலிகளின் அழுத்தத்தால், கையின் மணிக்கட்டுகள் நொறுங்கும் நிலைதான் ஏற்பட்டது!

இவ்வகையான துன்புறுத்தலின் உச்சமாக அவரை சுட்டுத்தள்ள போர் சேவர்கள் கூட்டம் துப்பாக்கி சகிதமாக விரட்டியது.

ஆரலவாய் மொழியிலுள்ள காற்றாடி மலை என்ற இடத்தில் கடுமையான தாகத்தால் தவித்தபடி ஓடும்போது கால் இடறி கற்பாறையில் விழ, இவரது காலின் முட்டுப்பகுதி கல்லில் மோத, அற்புத நீரூற்று ஏற்பட அந்தத் தண்ணீரைக் குடித்து தாகத்தைத் தீர்த்துக் கொண்டார். தேவசகாயம்.

இன்றும் அந்த நீரூற்று தாரளாமாக நீரைத் தந்து கொண்டிருக்கிறது!!




காற்றாடி மலையிலலுள்ள ஒரு கெபி



Fig. 1



Fig. 2

புனிதர் பெயரிலான சில ஆலயங்கள்

இறுதியில் குண்டுகளுக்கு இறையாகி உயிரைவிட்டார் இந்த மனிதப் புனிதர். உயிர் விட்ட தேவசகாயத்தின் உடலைக் கூட விட்டு வைக்கவில்லை இந்த கயவர்கள்!

அவரது உடலை அவரது நலவிரும்பிகள் எடுத்துச் சென்று விடக்கூடாது என்ற நோக்கில் உடல் அங்கேயே எரிக்கப்பட்டது!

எரியாத உடலின் சில பாகங்களைப் பத்திரமாக எடுத்துச் சென்று, கோட்டாரிலுள்ள புனிதசவேரியார் தேவாலயத்தில் அடக்கம் செய்தார்கள் அவரது நலம் விரும்பிகள்.



**த**மிழ்நாடு கத்தோலிக்க திருசபைக்கு அந்த நாள் பொன்னாள். கத்தோலிக்கர்களின் தலைமைப் பீடமாக ரோமாபுரியிலுள்ள வத்திக்கானில் அமையப்பெற்ற புனித பேதுரு சதுக்கத்தில், ஒரு லட்சம் பக்தர்கள் அகில உலகிலிருந்தும், குறிப்பாக நமது தமிழ்நாட்டிலிருந்தும் கலந்து கொண்டார்கள்.



கன்னியாகுமரி மறைமாவட்டத்தின் ஆயர் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் அங்கு சென்று இவைகளை எல்லாம் கண்டு களிக்க கிடைத்த பாக்கியத்தை என்னனென்று சொல்வது!

தமிழக முதலமைச்சர் உத்தரவின்படி, தமிழக அமைச்சர் பெருமக்கள் திரு. மனோ தங்கராஜ், திரு. மஸ்தான், சிறுபான்மை ஆணைய தலைவர் திரு. பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.





பொதுவாக, தமிழக நிகழ்ச்சிகளில் கூட தமிழ் மொழி புறக்கணிக்கப்படும் அவல நிலையில் நாமிருக்க, அங்கே வத்திக்கானில் நடந்த விழாவில், தமிழுக்கு முன்னுரிமைக் கொடுக்கப்பட்டு பிராத்தனைகள்

**புனிதர் பயன் படுத்திய கிணறுகள்**









நடைபெற்றதையும் உலக தமிழர்கள் பார்த்து வியந்தார்கள், போற்றினார்கள்.

போதாக் குறைக்கு தமிழகத்திலிருந்து அருட்சகோதரிகள் தலைமையில் சென்ற பாடகர் குழு கிறிஸ்தவ பாடல்களைப் பாடி அசத்தினர். அதற்கு முன்பு 'நீராரும் கடலுடுத்த நில மடந்தை' என்ற பாடலை பாடும் போது அயல் நாட்டினர் உட்பட பலரும் மெய் சிலிர்த்தனர்.

தேவசகாயம் உட்பட உலகம் முழுவதும் உள்ள 9 புனிதர்களுக்கு போப்பாண்டவர் புனிதர் பட்டம் வழங்கினார். தமிழகத்திலுள்ள தொலைக்காட்சிகளும் இதன் பகுதி நேர செய்திகளை ஒலிபரப்பினது ஆறுதலாயிருந்தது.

**வ**டக்கன்குளத்தில் நடந்த புனித தேவசகாயம் விழாவில் கூட, தமிழக சபாநாயகர் வண. அப்பாவு மற்றும் ஐந்து மறை மாவட்ட ஆயர்களும் கலந்து கொண்டது ஒரு சிறப்பான நிகழ்வாகும்.





# முற்பகல் செய்த வினை பிற்பகலில் விளைந்தது சிரிலங்காவில்...

**– ஞாயம் தீர்த்த இயேசுவின்**

*உலகத்தின் 195 நாடுகளுள், இப்பொழுது வீதியிலிறங்கி சாப்பாட்டுக்கு, அல்லாடும் மக்கள் யாரென்றால் அது சிரிலங்காதான்!*

*எத்தியோப்பியா தொடங்கி, உகாண்டா வரை சுமார் 20 ஏழை நாடுகள் பரிதாப நிலையில் இருக்கிறார்கள் என்பது தெரிந்த கதைதான்.*

*ஆனால், வாழ்ந்து கெட்டவன் என்ற சொல்லுக்கிணங்க ஓரளவு வசதியாக இருந்தவர்கள்தான் சிரிலங்காவாசிகள்!*

*2022 ஆகஸ்டு நிலவரப்படி ஒரு கிலோ காய்கறி ரூ.375 முதல் ரூ.500 வரை ஒரு கிலோ வெங்காயம் ரூ.185, ஒரு கிலோ சர்க்கரை ரூ.330, வாழைப்பழம் ரூ.240, பொன்னி அரிசி ரூ.187, இந்த விலை நமது ஊரில் இருந்தால், நம்மால் வாழமுடியுமா?*

*கால்வயிறு அரை வயிறை நிரப்பி போக்கிடம் இல்லாமல் பரிதவிக்கிறார்கள் இந்த நாட்டை சேர்ந்தவர்கள்!*

*ஏன் இந்த நிலை?*

*இப்படி ஒரு நிலை வரும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்களா?*

*இப்பொழுது விரட்டி அடிக்கப்பட்ட இதே கோத்தபய வகையறாக்கள் தானே அன்று தமிழ் ஈழ விடுதலைப் போரில், அப்பாவி தமிழ் மக்களை ஈவு இரக்கிமில்லாமல் கொன்றார்கள்!*

*சுமார் 2 இலட்சம் குழந்தைகள், பெரியவர்களை கொத்துக்குண்டு போட்டு, கொசுக்களுக்கு மருந்தடிப்பது*




# இரத்தம்

போன்று கொன்று குவித்தானே இந்த மகிந்த ராஜபக்சே மற்றும் அவனது சகோதரர்கள்!!

'துண்டைக் காணோம். துணியை காணோ மென்று' பெட்டி சட்டிகளையெல்லாம் தூக்கிக் கொண்டு திருடன் ஓடுவது போன்று மிகவும் கேவலமாக தப்பிச் சென்ற காட்சிகளைப் பார்த்தால், நமக்கே பாவமாகத்தானிருக்கிறது.

எங்கேயாவது நடந்ததுண்டா? அதிபர் மாளிகையை முற்றுகை இடுகிறோம். என்று, புகுந்த ஆயிரமாயிரம் மக்கள், இறுதியில் கோத்தபய ராஜபக்சேயின் மாளிகையை சுற்றுலாத்தலமாக மாற்றியதோடு அவர் படுத்துறங்கிய கட்டிலில் தாமும், படுத்து, எத்தனை ஜோராக செல்பி எடுத்துக்கொண்டு கொண்டாடினர்!

சரி, அதற்கும் இப்பொழுதுள்ள பஞ் சத்துக்கும் என்ன சம்பந்தம்?

ஒரு நாட்டின் குடிமக்கள் நன்றாக வாழ வேண்டுமென்றால், முதல் அடிப்படை அந்த நாட்டின் ஆளுபவர்கள் ஒழுங்கான முறையில் நாட்டை ஆள வேண்டும்.

அந்த நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும், நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மக்களை ஏமாற்றிக் கொண்டிருந்த இந்த ஆளுபவர்களை மகேசன் ஒருவன் பார்த்துக் கொண்டிருக்கிறான். என்பதை பாவம், இவர்கள் மறந்து விட்டார்கள்.

கடைசியாக என்ன நடந்தது, சிரிலங்காவின் பொருளாதாரம் ஒரேயடியாக சரிந்து, அதல பாதாளத்துக்குச் சென்றுவிட்டது.

எப்படி?

நினைவிருக்கிறதா? 2019ல் வெளிவந்த வடவை மாதா குராலாலியில் நாம் குறிப்பிட்டிருந்தோமே நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர்கள் இயேசு உயிர்த்த நாளில் தேவால யத்துக்குச் சென்றவர்கள், மந்தை மந்தையாக பிணமாகக் குவிக்கப்பட்டார்கள்.


அப்போதே, இந்த நாம் எழுதியிருந்தோம் அரசுக்கு கெட்ட பெயர் வரவேண்டுமென்று எதிர் கட்சியினராக இருந்த இந்த கோத்தபய கோமாளிக் கும்பல்தான் இவ்வாறு நடக்க இஸ்லாமியர்களைத் தூண்டுதலாயிருப்பார்களோ என்ற சந்தேகம் உள்ளது என்று!!

கிறிஸ்த்தவர்தானே, அவன் அடிக்க அடிக்க கொடுத்துக் கொண்டிருப்பானென்று அப்படி துள்ளினார்கள்!!

அந்த நாளில் கொல்லப் பட்டவர்களில், கணிசமான வர்கள் சிரிலங்காவைச் சுற்றிப் பார்க்க வந்தவர்களில் வெளிநாட்டு பார்வையாளர்களும் அடக்கம்!



மகிந்த இராஜ பக்ஷ



# இதுதான் அழிவின் ஆரம்பம்!!

சிரிலங்காவின் பொருளாதாரத்தை இதுவரை அதிகளவில் உயர்த்தியது அந்நியச் செலாவாணிதான்

ஆயிரக்கணக்கில் வரக்கூடிய வெளிநாட்டு பார்வையாளர்களுள், 67 சதவீதம் பேர் தங்கள் வருகையை இச்செய்தி கேட்ட உடனே நிறுத்திவிட்டார்கள்.

போதாக்குறைக்கு வந்து சேர்ந்தது கொரோனா ஊரடங்கு!

'பட்டகாலிலே படும்' என்பார்களே, அதுபோன்று கிழிந்த துணியை ஒட்டுப் போடுவது போன்ற அரசால் விதிக்கப்பட்ட வரியின் பழு, முதுகில் சுமக்க முடியாத அளவிற்கு சென்றது மக்களது வாழ்வில்!


ஒருபுறம் இந்த நிலை நீடிக்க மறுபுறம், புதிது புதிதாக பண நோட்டுக்களை அச்சடித்து, தாராள பிரபுக்களாக காட்டிக் கொண்டார்கள், இந்த மகிந்தபக்சே கொள்ளைக் கூட்டம்!!

ஆம்! ஒருபுறம் புத்தம் புது நோட்டுக்கள் அச்சடிக்க அச்சடிக்க மறுபுறம் கொல்லைப் புறம் வழியல் பணமும் கொள்ளை போனது."

சீனாவுக்கு பல்லிழித்துக் கொண்டு இந்தியாவை கட்டுக்குள் கொண்டு வந்த இந்த கூட்டம் ஒரு கட்டத்தில், அந்த சீனாவே கைவிட்ட பின்னர், பாவம், எந்த தமிழனைக் கொன்று குவித்தானோ, அதே தமிழனின் உணவுப் பொருள் உதவியை தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வடிவில் பெற வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.



மு.க.ஸ்டாலின்











கோத்தபய இராஜ பக்ஷ

ஆக, பொருளாதார சரிவுக்கு ஆரம்பமே அந்த ஈஸ்டர் தின பாதகச் செயல்தான்! ஆக, நமது பார்வையில் இயேசுவின் மீது அன்று வீழ்ந்த இரத்தம், இன்று ஞாயம் தீர்க்கிரதா?



பசில் இராஜ பக்ஷ



# வாசல் திறந்தது...!

## M.சேவியர் சந்திரகுமார்



கேளம்பாக்கம் இறை இரக்க ஆண்டவர் ஆலயம்

சென்னையை அடுத்த கேளம்பாக்கத்தில் தான் அந்த சம்பவம் நடைபெற்றது.

கேளம்பாக்கத்தில் அமைந்துள்ள அகில உலகப் பிரசித்தி பெற்ற இறை இரக்க ஆண்டவரின் ஆலயத்தில் மாலை நேரத்திதல் ஜெபிக்கச் சென்ற எனக்கு நேர்ந்த அவமானத்தாள் இங்கு பேசப்படும் பொருளாகிறது.

அவமானப்படுவதெல்லாம், அந்த அளவுக்கான பிரச்சினையா என்பது இக்கட்டுரையின் இறுதியில் உங்களுக்கே புரியும்!

இந்த அவமானம் ஏன், எதற்கு யாரால், என்று ஆராயுமுன்பு...

கேளம்பாக்கம் இறை இரக்க ஆண்டவர் ஆலயத்தின் (Divine mercy Church ) சிறப்பை முதலில் தெரிந்து கொள்வோம்.

அதன் வடிவமைப்பு தொடங்கி, அதன் பிரம்மாண்டமும், கலை அம்சங்களுடன் இரவிலே மின்னலாய் ஜொலிக்கின்ற தோற்றமும், எல்லாவற்றுக்கும் மேலாக, புனித பாஸ்டினாவுக்கு இயேசு காட்சி அளித்து தனது

2006 ஆம் ஆண்டில்
இறைவன் இயேசு எனக்குக் கொடுத்த
தரிசனத்தில் கூறிய முன்னறிவிப்புகளுடன்,
16 வருடங்கள் கழிந்த, இந்த 2022ஆம்
ஆண்டில் எனது வாழ்வில் நடந்து வருகின்ற
காரியங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது,
இறைவன் ஒரு செய்தியை மக்களுக்கு
உணர்த்துவதற்காக இருக்குமோ
என்று எனக்குத் தோன்றியதன்
விளைவே இந்த கட்டுரையாகும்!

–ஆசிரியர்

இரக்கத்தைப் பற்றி விவரித்த, அதே இறை இரக்க ஆண்டவரின் வல்லமையுமே, இங்கு நாள்தோறும் ஏராளமான சாதி மதங்கடந்த பக்தர்களை ஈர்க்கிறது என்பதே உண்மை.

இந்த வருடத்தின் பிப்ரவரி மாதத்திலே கொரோனா அரக்கனின் பரவல் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டு தளர்வுகள் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டிருந்த வேளையிலே கேளம்பாக்கமும் இதன் திறப்பு விழாவுக்கு தயாராகியது.

இந்த ஆலயத்தைப்பற்றி நான் எனது முகநூலில் *2021*ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பதிவிட்டிருந்ததை தனிச்செய்தியாக இங்கு பார்க்கலாம்.

இத்தனை சிறப்புமிக்க ஆலயத்தில் எனக்கேற்பட்ட அனுபவத்தால் ஏற்பட்ட வடு கடந்த *16* வருடங்களாக ஏற்கனவே எனக்கு நேரிட்ட இக்கட்டுக்களுக்கெல்லாம் முத்தாய்ப்பாக அமைந்தது என்பதே எனது முடிவாகும்.

இதன் விபரத்தை முழுமையாக தெரிந்து கொள்வதற்கு முன்னர், அன்றொருநாள் நிகழ்ந்த இயேசுவின் காட்சி பற்றியும் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும்.

வடவை மாதா குரலொலி, ஆகஸ்ட் *2008* இல் தொடங்கி அதன் பின் வெளியிடப்பட்ட ஒரு சில இதழ்களில் இறைவன் இயேசுவின் வெளிப்பாட்டைப் பற்றி தெரிவித்ததை கீழே தருகிறேன்.

இதைத் தெரிந்து கொண்டால் மட்டுமே, பின்னால் தெரிவிக்கப்படும் விஷயங்களை புரிந்து கொள்ள முடியும்!

### "இயேசுவின் காட்சி எனக்கு நடக்கப் போவதைக் காட்டியது"

*2006*ஆம் வருடம் ஆகஸ்டு மாதம், வடவை மாதா குரலொலியை விநியோகிக்கவும், மாதா திருவிழாவில் கலந்து கொள்ளவும், நான் வடக்கன்குளம் வந்திருந்த நேரம்!

அன்றிரவு அதாவது *16* ஆம் தேதி

## 2021 பிப்ரவரி 14 ல், இவ்வாலயம் உருவானது பற்றிய என்னுடைய முகநூல் பதிவு..

கேளம்பாக்கத்துக்கே பெருமை சேர்க்கும் ஒரு காரியம் பிப்ரவரி *13*ஆம் தேதி நடந்தேறியது. கிறிஸ்தவ வேதாகமத்தில் குறிப்பிட்டிருக்கும் இயேசு வின் பன்னிரெண்டு சீடர்களின் சுருபங்கள் கோயிலுக்கு மேலேயே நிறுவப்பட்டிருக்கும், கத்தோலிக்க தேவாலயம் தமிழகத்திலேயே இதுவாகத்தானிருக்கும். ரோமாபுரி கலையழகுடன், இவ்வளவு பிரம் மாண்டமான கோவில், நிச்சயமாக தமிழக பக்தர்களை கேளம்பாக்கத்துக்கு அதிக அளவில் ஈர்க்கும் என்பதில் சந்தேகமில்லை.

முன்பக்கம் மாத்திரமல்ல, கோவிலின் நான்கு புறங்களிலும், அவ்வளவு நுட்பமான சிற்ப கலையழகு.!!

இரவு நேரங்களில் கோயில் முழுவதுமே தங்கமாக மின்னுகிறது.!!

வெளியிலேயே இப்படியென்றால், உட்பக்கத்தின் அமைப்புக்கள் எப்படி யிருக்கும் என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டுமா.?

மனதளவிலும் உடலளவிலும் நொறுங்கும். மனிதர்களுக்கு இயேசுவின் இருதயத்திலிருந்து பாயும், அளவு கடந்த இரக்கத்தை வெள்ளமென பெற்றுத் தருவதுதான், இந்த ஆலயத்தின் சிறப்பு! இந்த தேவாலயத்தின் திறப்பு விழாவுக்கு கேளம்பாக்கத்தைச் சுற்றியுள்ள எல்லா மதத்தினரும் கலந்து கொண்டது, இந்த விழாவின் சிறப்பம்சமாகும்.


கடைசியாக ஒன்று! ஒருமுறை இங்கு வந்து பாருங்கள்... இறைவனின் அருளில்லாமல் இந்த ஆலயத்தை நிச்சயமாக ஒருவர் கட்டியிருக்க முடியாது. பங்குத் தந்தையான அருட்திரு. ஸ்டீபன்தான் அவர்!

முழுக்க முழுக்க உள்ளூர் மற்றும் சுற்றுப்புற ஊர்களிலுள்ள பல மதங்களைச் சேர்ந்த பொதுமக்களின் பேருதவியுடன்...!! •

அதிகாலை 1 மணியளவில் இறைவன் இயேசுவின் காட்சியை அந்த அறையில் நான் காண நேரிட்டது. அவரது விலாவிருந்து பம்பு செட்டில் எவ்வாறு தண்ணீர்பீச்சி அடிக்கிறதோ அதே பருமனில் வேகமாக இரத்தம் பீச்சி அடிக்கப் பார்த்தேன்.

ஒரு சினிமா படம் பார்த்தது போன்று காட்சி இருந்தது

காட்சியின் அடுத்தகட்டம்



எனக்கு நடக்கப் போவதை தரிசனத்தில் பார்த்தேன். அவருக்கு முதுகைக்காட்டிய படி எதிர்திசையில் ஒரு உருவம் புழு போன்று சுருண்டு கிடந்தது அது வேறு யாருமில்லை! நான்தான்.

அடுத்தகட்டமாக, இறைவன் இயேசுவின் கை மட்டும் நீளமாக வளர்ந்து, சுருண்டு என் உருவத்தின் கைகளைப் பிடித்து என்னை மேலே தூக்கியது.!

“உலகமே உன்னைக் கைவிட்டாலும் நான் ஒருபோதும் உன்னை கைவிடவே மாட்டேன்” இயேசுவின் வாயிலிருந்து வார்த்தைகள் புறப்பட இந்த வார்த்தைகள் மிகத் தெளிவாக எனக்கு கேட்டன.

மேற்படி இயேசுவின் காட்சியில் முன்னறிவித்தபடி பல்வேறு சம்பவங்கள் நேர்ந்தன. அந்தந்த சம்பவங்கள் மூலம் முற்றிலுமாக கைவிடப்பட்டு ஒவ்வொன்றிலும் அற்புதமாக கைதூக்கப்பட்டேன்.

இவற்றைத்தான் முந்தைய இதழ்களில் விவரித்திருந்தேன்.

இனி இப்பொழுதுள்ள விஷயத்தைத் தொடர்கிறேன்.

இன்றைய தேதியிலிருந்து, சுமார் 6 மாதங்களுக்கு முன்னர், மாலை ஏழு மணி! ஜெபமாலை செய் வதற்காக கோயிலுக்குள் நுழைந்தேன். ஜெப மாலையின் பெரும்பகுதி முடியும் நேரம்!

எனக்கு அருகில் 20 அடி தொலைவில் இரண்டு குடும்பங்கள் புதிதாக திருமணமானவர்கள், மிகுந்த சப்தத்துடன் பேசியும் சிரித்துமாக இருந்தார்கள். அந்த சமயத்தில் என்னைப் போன்று ஜெபம் செய்ய வந்தவர்களுக்கு இடையூறு செய்கின்ற அளவுக்கு கூச்சல்!

பொறுத்துப் பார்த்த என்னால், மேற்கொண்டு ஜெபம் செய்ய இயலவில்லை. நேராக அவர்களிடம் சென்றேன். அதில் ஒருவர் காலுக்கு மேல் காலைப் போட்டு, அநாகரீகமான அமர்ந்திருந்தார்.

‘நீங்கள் கிறிஸ்தவரல்லாதவரா’ என்றேன். அவரது பாவனைதான் என்னை அவ்வாறு கேள்வி எழுப்பத் தூண்டியது.

ஒத்துக்கொண்டார் அவரை அழைத்து வந்த கத்தோலிக்க குடும்பம், ஆங்கில பலிபூசைக்கு ஞாயிறுகளில் வரக்கூடியவர்கள் போல தெரிந்தது! அனைவருமே 35 வயதுக்குட்பட்டவர்கள்தாம்.

அழைத்து வந்த குடும்ப உறுப்பினர்களிடம் நான் கூறினேன். “அவர்கள் இந்துக்கள், நமது முறைகளை அறியாதவர்கள், இங்கு 40 பேருக்கு மேல் ஜெபம் செய்து கொண்டிருக்கிற நேரத்தில் நீங்கள் இவ்வாறு சத்தமிடுவது சரிதானா என்றேன்.

“நீங்கள் யார்? இதைக்கேட்க” என்றார், அவர்களை அழைத்து வந்திருந்த அந்தப்பெண்!

‘நான் இந்தப் பங்கைச் சேர்ந்த ஒரு உறுப்பினர்’

‘நாங்கள் சத்தம் போடுவதை கேட்க உங்களுக்கு யார் உரிமை தந்தது? ‘வாருங்கள் பங்கு தந்தையர் இருப்பார்கள். அவர்களிடமே நியாயம் கேட்கலாம்.’

ஒரு கணம் தயங்கி, பின்னர் ஒத்துக் கொண்டேன். கோயில் முதல் தளத்தில் இருந்தபடியால் பின்புற படிகளின் வழியே இறங்கிச் சென்றோம்.

பங்குத் தந்தையும், பிற தந்தையர் அனைவருமே ஒரு மாதம் முன்னர்தான் பொறுப்பேற்று கொண்டிருந்தார்கள் அவர்கள் எனக்கும் சரியாக அறிமுகமில்லாதவர்தான்.



கேளம்பாக்கம் இறை இரக்க ஆண்டவர் ஆலயம்

முன்னாள் பங்குத் தந்தைக்குப் பதிலாக வந்தவர்களே இந்த தந்தையர்!!

கோயிலைக் கட்டுவதற்கான கட்டிடக்குழுவின் செயலாளராக, கடந்த ஒரு மாதம் முன்பு வரை பணியாற்றிய நானும் இரண்டு மூன்று பேரின் செயல்பாடுகளின் தன்மையை அறிந்து அனுபவப்பட்டு, பொறுப்பிலிருந்து என்னை விடுவித்துக்கொண்டு விட்டிருந்தேன்.

இதெல்லாம் நமக்கு சரிப்பட்டு வராது என நினைத்தே இவைகளிலிருந்து ஒதுங்கி விட்டிருந்தேன்.

ஒரு கணம் இவையெல்லாம் எனது மனத்திரையில் ஓடியது.

பங்குத் தந்தையின் இல்லத்தை நோக்கிச் சென்றோம். தூரத்தில் புதிய பங்குத் தந்தை நின்று கொண்டிருந்தார்!

மேற்கொண்டு நடந்த சம்பவங்கள் பற்றி விவரிக்கும் முன்பு கடந்த கால சில அனுபவங்களை இங்கு எடுத்துக் கூறினால்தான் சரிப்படும் என்பதால் அதனை கீழே தெரிவிக்கிறேன்.

நான் எனது செயலாளர் பொறுப்பிலிருந்து விலகுவதற்கு இந்த நபர்களது செயல் முறைகள்தான் காரணம்.

கடந்த சுமார் இரண்டு வருடங்களுக்கு மேலாக நாங்கள் அனைவருமே 'கோயில் கட்டட நிதி' நன்கொடை வசூல் செய்யுமுகமாக எனது காரில் செல்வதை வழக்கமாக கொண்டிருந்தோம். ஜாதி, மதம் பாராது, சம்பந்தமே இல்லாதவர்கள் கூட லட்சக்கணக்கில் பங்குத் தந்தையின் கடின உழைப்பின் மூலம் நன்கொடைகள் கொடுத்த படியால், கட்டடம் வேகமாக வளர்ந்தது.

பங்கைச் சேர்ந்த உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள், ஆயிரம், லட்சம் என்று கொடுத்தார்கள்! பலர் வேலைகளின் பொறுப்புக்களை எடுத்துக் கொண்டார்கள்.

ஆனால். . .

செயலாளரான என்னால், நான் பொறுப்பேற்றுக் கொண்ட தொகையை கடைசி வரை செலுத்தவே முடியவில்லை!

ஆரம்பத்தில் கொடுத்த சுமார் 2 இலட்சத்ததோடு சரி, அதன்பின்னர் சில ஆயிரங்கள் கூட என்னால் புரட்ட முடியவில்லை.

அந்த மூவர் குழுவின் ஒரு சிலர் இதனாலேயே என்னை காதுபட அவமானப்படுத்தி கேலி செய்வதை வாடிக்கையாகவே கொண்டிருந்தார்கள்.

கோயில் கட்டடக்குழு சார்பாக நான் எழுதும் கூட்ட அறிக்கை கூட தேவையில்லாதது' என்று என்னிடமே கூற ஆரம்பித்திருந்ததும் அப்பொழுது நினைவுக்கு வந்தது.

வார இறுதி நாளான ஞாயிற்றுக் கிழமையில் நடைபெறுகின்ற நான்கு பலிபூசையிலும் சராசரியாக இரண்டாயிரம் பேர் கலந்து கொள்ளும் இந்த கோவிலில் அவர்கள் வலம் வந்தார்கள்.

கோயில் திறப்பு விழாவில் தாம் மட்டுமே முன்னிலைப்படுதப்பட வேண்டும் என்ற நோக்கில் திறப்பு விழாவுக்கு 4 மாதங்களுக்கு முன்பிருந்தே என்னை ஓரங்கட்ட ஆரம்பித்தார்கள், தனது சிறிய பரிவாரங்களுடன்! வழக்கமாக என்னோடு சேர்ந்து செய்யும் நிதி வசூல் பயணங்களைக் கூட எனக்கு அழைப்பு இல்லாமல், அவர்களே செய்ய ஆரம்பித்தார்கள்.

எல்லா வகையிலும் ஓரங்கட்டினார்கள், எந்த வித முக்கிய நிகழ்ச்சிகள் பற்றியுங்கூட எனக்கு தெரிவிப்பதில்லை.

என்னை அவர்கள், ஒதுக்குகிறார்கள் என்ற விபரமே திறப்புவிழா அன்றுதான் தெரிந்து கொண்டேன்.

கோயில் என்பது தனிப்பட்டவர் சொந்தம் கொண்டாடக்கூடியதில்லை; ஜாதி பாகுபாடில்லை; அது எல்லோருக்குமே சொந்தம்! இந்த இறை சமூகத்திலே, இவர்களைப் போன்றவர்கள் அரசியல் செய்வது, அந்த ஆண்டவனுக்கே ஏற்காது என்பதாலும் இதுபோன்ற 'சாதாரண' பொது நபர்களை பெரிது படுத்துவதை தவிர்க்க வேண்டும் என்ற காரணத்தால் மேற்படி விவரங்களை பங்குத் தந்தை உட்பட யாரிடமும் கடைசி வரை நான் கூறவில்லை.!

எனது பொறுப்பிலிருந்து ஒதுங்கிக் கொண்டேன். செயலாளர் என்ற முறையில் என்னிடமிருந்த பதிவேடுகளும் சப்தமில்லாது ஒப்படைக்கப்பட்ட பின்னர்தான் நிம்மதியே பிறந்தது.

ஆக, இப்பொழுது, கோவிலில் நடந்த அந்தச் சம்பவத்தைத் தொடர்கிறேன்..

என்னை அழைத்துச் சென்ற அந்த பெண்ணுங்கூட இவர்களுக்குள் ஒருவரை நன்றாக தெரிந்து வைத்திருக்க வாய்ப்பு உண்டு.

இந்த பெண் நடந்ததை அவர்களிடம் கூற, சும்மா கிடந்த வாய்க்கு அவல் கிடைத்தது. வார்த்தையால் குதறி விட்டார்கள்!

உள்ளான அவர்களது மனதில் என்மேல் அதிருப்தி இருந்தாலும் கடந்த காலங்களில் நேரில் பார்க்கும் பொழுதெல்லாம் எனக்குள்ள வாய் வார்த்தை மரியாதையை கொடுத்து வந்தவர்கள்தான் இவர்கள்!

ஆனால், ஆளுக்கொரு ஈட்டி கொண்டு குத்துவது போன்று அவர்களது வார்த்தைகள் இருந்தன.

ஏற்கனவே சில நாட்களுக்கு முன்பு நடந்த 60 பேர் கொண்ட பொதுக் கமிட்டி கூட்டத்தில் இவர்களது ஓரங்கட்டும் செயல்பாடுகளைக் கூற முற்பட்ட போது, அங்கிருந்த முன்னாள் பங்குத் தந்தை, என்னை பேச விடாமல் தடுத்த செயல், இவர்களுக்கு ஒரு தெம்பையும், அசாதாரண தைரியத்தையும் கொடுத்திருந்தது, இவர்களது இப்போதைய பேச்சில் தெரிந்தது!!

'ஆங்கில பலிபூசையின் போது எத்தனை பேர், காலுக்கு மேல் கால் போடுகிறார்கள்.' பெரிதாக கேட்க வந்து விட்டீர்கள்' என்று நடக்காத வழக்கத்தை தனது வாதத்திற்கு வலு சேர்க்கும் விதமாக பேசினார்கள்.

ஆளுக்கு ஆள் என்னை வசை பாடியது, அதுவும் கோயில் வளாகத்தில் நடந்தது எனது வாழ்வில் இதுவே முதன்முறையாகும்!

என்னை அவர்கள், பேச விடவுமில்லை! பேச முயன்றாலும் அவர்களது ஆதிக்கம் அதிகமாக இருந்ததால் ஒரு கட்டத்தில், பேசுவது வரை பேசட்டும் என்று மௌனமாகவே நானிருந்தேன்.

சுமார் 45 நிமிடங்கள் கடந்தபோது அந்த பெண்ணின் கணவர் வாய் திறந்தார்.

"சார்... நீங்கள் கேட்டதில் எந்தத்





தவறுமில்லை சப்தம் செய்யாதீர்கள் என்று மட்டும் கேட்டுக் கொண்டீர்கள்" என்று அவராகவே எல்லார் மத்தியிலும் வாக்குமூலமாக கொடுத்தது எனக்கு அந்த தருணத்தில் முழு பலத்தைக் கொடுத்தது.

கையினுள்ளே மறைந்திருந்த ஜெபமாலை ஏதோ ஒன்றை உணர்த்தியது.

கடந்த பல வருடங்களாக எனது கடன் பிரச்சினைக்காகவும் நான் பல்வேறு பக்தி முயற்சிகளை செய்து வந்திருக்கிறேன். ஞான காரியங்கள் ஒன்றிலும் தவறுவதில்லை.

ஒரே நாளில் சென்னைவரையுள்ள 9 மாதா கோயில்களுக்கு சென்று ஜெபிப்பது, வாரத்தில் குறிப்பிட்ட நாட்களில் சில கோயில்களுக்குச் செல்வது, பணி நிமித்தம் எங்கு சென்றாலும் அருகிலுள்ள தேவாலயங்களுக்குச் சென்று ஜெபிப்பது என்று தொடர்ந்து செய்து வந்த நான், சம்பவம் நடந்த மாலை நேரத்தில் தொடர்ந்து தினமுமாக ஒன்பது நாட்கள் ஜெபமாலை ஜெபிப்பது என்ற நோக்கில் வந்திருந்த போதுதான் இந்த சம்பவம் நடந்தது. அன்றைய நாள், ஜெபத்தின் ஏழாவது நாள், இன்னும் இரண்டு நாளில் நவநாள் இறுதி பெறுவதாக இருந்தது.

ஆக, அந்தப் பெண்ணின் கணவர், உண்மையின் வார்த்தைச் சொன்னதும், அவர்களது கூச்சல்களுக்கு நடுவில், அங்கிருந்து நகர்ந்து ஜெபமாலையின் விடுபட்ட பாகத்தை முடிக்கும் நோக்கில் ஆலயத்துக்குச் சென்று, அனைத்தையும் மாதாவின் பாதத்தில் வைத்து விட்டு வீடு சென்றேன்.

**வீ**டு செல்லும் வழியில் எனது நினைவு பின்னோக்கி சென்றது.

***கடந்த 20 ஆண்டுகளில், பெரும் பாலான வருடங்களில் அங்குள்ள பங்கு ஆலயத்தின் ஒலி ஒளிக்கான செலவுகளை செய்து வந்திருப்பதை அனைவரும் அறிவர்.***

***நூற்றுக்கும் மேற்பட்டவர்கள், எமது நிறுவனத்தில் பணிபுரிந்த காலத் தொடங்கி இப்பொழுது வரை, எந்தவித சர்ச்சையிலும் அகப்படாத வாழ்வு என்னுடையது.***

***அப்படிப்பட்ட என்னை அவமதித்தது அவர்களது அரசியல் தனத்தின் உச்சம் என்பதை அப்பொழுது நினைத்துப் பார்த்தேன்.***

ஆனால், 'இறைவன் வாழும் ஆலயத்தில் ஜெபம் செய்யவந்த என்னை, அதற்கு இடையூறு செய்யும் செயலை உறக்கச் சொன்ன ஒரே காரணத்துக்காகவா இவ்வளவும், வாங்கிக் கட்டிக் கொண்டேன்! என்று எனது மனது பதைபதைத்து.

ஞாயிறு தினங்களில் இந்த மூவரும் தனித்தனியாக கோவிலின் வாசலிலோ, இன்னொருவர் பீடத்திலோ மற்றுமொருவர் காணிக்கை எடுப்பதற்கோ நின்றுகொண்டிருப்பது வழக்கமாகிவிட்டிருந்தபடியால் எப்படி நான் இவர்கள் மத்தியில் கோயிலுக்குள் நுழைந்து இறைவனிடம் கேட்க முடியும் என்பதாக மனம் தவித்தது.

அதுமட்டுமல்லாது, மறுநாள் நவநாளின் எட்டாவது தினமல்லவா, எப்படி என்னால் அங்கு சென்று ஜெபிக்க முடியும்? எப்படி நவநாள் ஜெபத்தை இறைவனுக்கு உகந்ததாக்க முடியும் என்று நினைக்க அப்போதுதான்


கேளம்பாக்கம் இறை இரக்க ஆண்டவர் ஆலயம்

அந்த ‘ஐடியா’ எனக்குள் உதித்தது.

கோவிலுக்கு 50 அடி தள்ளி, அதற்கு எதிரிலேயே அதே சாலையில் அமைந்துள்ளதுதான் எனது அலுவலகம்.

அந்த அலுவலகத்தில் அமைந்துள்ள குறிப்பிட்ட ஒரு கட்டடத்தின் குறிப்பிட்ட ஒரு ஜன்னலைத் திறந்தால், இறை இரக்க ஆண்டவரின் சுருபம் உட்பட, முழுக்கோயிலும் கண்களுக்குத் தெரியும்!

‘உலகமே கைவிட்டாலும் நான் கைவிட மாட்டேன்’ என்றாரல்லவா?

120 பேருக்கு மேலாக வேலை செய்து வந்த இடத்தில் நான் ஒருவரே முழுநேரப் பணியாளர் என்று சுருங்கி விட்ட நிலைமையில் பல வருடங்களாக இருந்ததை நினைத்தேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், 60 பேருடன் பயிற்சி வகுப்புக்களை 10 பணியாளர்களோடு மீண்டும் ஆரம்பித்த என்னால், கொரோனா கட்டுப்பாடுகள் காரணமாக ‘மீண்டும் ஒரேயொருவன்’ என்ற நிலைக்கு தள்ளப்பட்டடதையும் நினைத்துப் பார்த்தேன்.

“இப்பொழுது ஒரே ஆதரவாக இருந்த இறைவனும், அவர் ஆலயத்துக்குள் நுழைய முடியாத சூழ்நிலையை அனுமதித்து, உலகமே கைவிடும் நிலை ஆகிவிட்டதே” என்று மனங்கலங்கியது.

அப்போதுதான் ...

அந்த அற்புதம் நடந்தது!!

பிரம்மாண்டமான கோயிலினுள்ளே, ஒரு தூணையாவது எனது செலவில் கட்டிக் கொடுக்க வேண்டுமே என்று எத்தனையோ முறை உபவாசத்துடன் ஜெபித்துங்கூட ஒன்றுமே வாய்க்கவில்லை!

ஆனால், இப்பொழுது பழைய கல்யாணத்துக்கு மொய் எழுதுவது போல, புதிதாக வந்த பங்குத் தந்தையரைப் பார்க்கச்சென்று, இறையருளால் எனக்கு கிடைத்த திடீர் வரவை, இரண்டு தவணையாக பங்குத் தந்தையிடம் கொடுக்கச் சென்றேன்.

ஒரே வாரத்தில் பதினாறு வருடங்களாக அடைப்பட்டிருந்த பணப் பிரச்சினைக் கதவுகள் ஒவ்வொன்றாகத் திறக்க ஆரம்பித்தன.

என்னை கோயிலுக்குள்ளேயே நுழைய விடாத சில மனிதர்கள் மத்தியில் எனக்கு திறந்தவாசலைத் தந்தார். ராஜமாளிகையில் அமைவது போன்று மூன்று பிரதான கேட் வாசல்கள் அதனைத் தாங்கும் பிரம்மாண்ட தளமும் சுவருமாக, அனைவரும் நுழையும் வாசலை, என் மூலம் கட்டச் செய்தார், இறை இரக்க ஆண்டவரான இயேசு!!

உலகமே கைவிட்டாலும் நான் உன்னைக் கைவிட மாட்டேன் என்று எனக்கு கொடுத்த வாக்குத் தந்தத்தை, அவரது ஆலயத்தின் மூலமேயே நிறைவேற்றியதோடு, ஏசாயா 22:22, மற்றும் வெளிப்படுத்துதல் ஆகமம், 3:8 ன்படி



இயேசு ஆண்டவர், நான் கேளம்பாக்கத்திற்கு வந்த காலந் தொட்டு இன்று வரை வசனங்கள் மூலமும், வெளிப்பாடு மூலமும்தான் ஒவ்வொரு செயல்களையும் நடைபெறச் செய்தார். யாருக்கும் தெரியாத உண்மைகளான இவற்றை, தக்க சான்றுகளோடு தொடர்ந்து வரும் பக்கங்களில் இறைவன் உணர்த்தியதால் வெளியிடுகிறேன்

– –ஆசிரியர்

திறந்த வாசலைத் தந்தார்.

**“நான் உங்களுக்குத் தந்த திறந்த வாசலை ஒருவனாலும் மூட முடியாது”**

*(வெளி. ஆகமம், 3:8)*

இதே போன்ற சம்பவம் எனது பிறந்த ஊரான வடக்கன்குளத்திலும் நடந்தது! வடக்கன் குளத்துக்கு இரண்டே இரண்டு பெருமைகளே உள்ளன. ஒன்று மாதாவின் சுருபம் தனது கரங்களை விரித்து கண்ணீர் விட்ட சம்பவம்! இடுத்தது, சமீபத்தில் புனிதராக உயர்த்தப்பட்ட புனித தேவசகாயத்துக்கு, வடக்கன்குளத்தில் தான் ஞானஸ்நானம் கொடுத்த காரணம் கருதி, வடக்கன்குளம் பெருமையடைந்த சம்பவம்..

2012ல். அப்போதிருந்த பங்குத்தந்தை மாதா காட்சி கொடுத்த சிற்றாலயம், ஓட்டை விரிசல் ஏற்பட்டு ஒழுகி மொத்த கட்டடமும் சிதிலமடைந்து வருவதால், அதனை சரி செய்யவும், வடக்கன்குளம் வரலாற்றை பிரதிபலிக்கும் பல வண்ண தரமான ஓவியங்களை வரைந்து சுவற்றில் பதிய வைக்கவும், அப்போதுள்ள காலத்தில் முத்திப்பேறு பெற்ற தேவசகாயத்துக்கு, அதே கோவிலில் மணி மண்டபம் ஏற்பாடு செய்யவுமான மூன்று காரியங்களுக்கு ஒரு பெருந்தொகை தேவைப்படுவதாக தெரிவிக்கவே, நிதி நிலைமை படுமோசமாக இருந்தும், மூன்று தவணைகளாக கொடுத்ததையும் எனது அந்த கால கட்டத்திலும், அதனைச் செய்ய இறைவன் அருள் செய்ததையும் இப்போது நினைத்துப் பார்க்கிறேன். இதன் திறப்பு விழாவுக்கு சுமார் 100 பங்குத்தந்தையர்கள் கலந்து கொண்டாலும் எனது மேற்படி இந்த பங்கேற்பு அன்றிலிருந்து இன்று வரை மறைத்தே வைத்திருந்தது ஏனென்று இன்றும் தெரியவில்லை!

மேற்படி, இரண்டு ஊர்களிலும் நடந்த இது போன்ற செயல்கள், ஒவ்வொரு பங்குத்தளத்திலும் நடக்க வாய்ப்புண்டு. ஒன்றில், அது பங்கு சேர்ந்த இயக்கத்தின் நிர்வாகப் பொறுப்புகளை பெற்றுக் கொண்டு இறைவனுக்குச் சித்தமான காரியங்களல்லாத விஷயங்களை செய்து, தனது செல்வாக்கை உணர்த்தும் அரசியல் நாடகத்தை நடத்துவதாக ஆகட்டும், அல்லது பங்குத் தந்தையே கூட, கொடுப்பவர்களைப் புறந்தள்ளிவிட்டு, தான் தான் செய்தேன் என்று என்று பங்குத்தளத்திலும் மேற்றிராசனத்திலும் தன்னை மட்டுமே உயர்த்தும் செயலும் ஆங்காங்கே நடக்கத் தான் செய்கிறது.

ஜெப சிந்தனையோடு இந்த கருத்தை வைக்கிறேன்.

இந்த கட்டுரையை எழுத குறைந்த பட்சம் 10 நாட்கள் இறை சமூகத்தில் காத்திருந்தேன். இறைவனது அனுமதியுடன், இறைவனது சமூகத்தின் முன், தகுதியே இல்லாத நான் இதனை எழுத இறைவன் தூண்டியதன் விளைவே இக்கட்டுரையே தவிர, எனது சொந்த செல்வாக்குக்காகவோ வேறு எதற்காகவோ இல்லை. சொந்த செல்வாக்கை உயர்த்த விரும்புபவர்கள், ஒருபோதும் தனது பிரச்சனைகளை வெளிப்படையாகக் கூறவே மாட்டார்கள் ஆனால் நான் என்னை தாழ்த்தி இறைவனை உயர்த்த எடுக்கும் இந்த முயற்சியில், குறிப்பாக இதில் எழுதப்படும் ஒவ்வொரு எழுத்துங்கூட, இறை நாமத்தை உயர்த்துவதற்காக மட்டுமேயன்றி தனிப்பட்ட யாருடைய பெருமையையும் குறைத்து மதிப்பிடுவதற்காக, நிச்சயமாக இல்லை இறைவனின் காட்சியின் மூலமும் அதனை வெளிக் கொணர்ந்த இந்த கட்டுரை மூலமும் கீழ்கண்ட ஒன்றை இறைவன் உணர்த்துவதாக நான் உணர்கிறேன்:

**‘பங்குத் தந்தையரோ பங்கு நிர்வாகிகளோ ஒருபோதும் இறைப் பணி சார்ந்த நிகழ்ச்சிகளை அரசியலாக்க முயற்சிக்காதீர்கள்’ – (முற்றும்)**







வடவைமாதா குரலொலி ஆசிரியர்சேவியர் சந்திரகுமாருக்கு MSFSயின் அகில உலகத் தலைவர் அருட்திரு அஃப்ரகாம் வெட்டுவேலில் முன்னிலையில்அதன் துணைத் தலைவர் நினைவுப்பரிசு வழங்கி கௌரவித்த போது எடுத்தபடம் அருகில், கேளம்பாக்கம் பங்குத் தந்தை ஜெயசீலன் நிர்வாகத் தந்தை அருட்திரு. லூர்க்காஸ்

முந்தைய கட்டுரையின் பிற்சேர்க்கை....



## "இயேசு ஆண்டவர், நான் கேளம்பாக்கத்திற்கு வந்த காலந் தொட்டு இன்று வரை வசனங்கள் மூலமும், வெளிப்பாடு மூலமும்தான் ஒவ்வொரு செயல்களையும் நடைபெறச் செய்தார்" சான்றுகள் கீழே.... ஆசிரியர்

கடைசி கால இன்றைய உலகில், தினமும் வாழ வழி நடத்தப்படுவதே அதிசயம்தான்.

ஆனால், இது நிச்சயம் இறைவனால் தான் நடைபெற்றது, விஞ்ஞான உலகுக்கே, ஏன் என்று தெரியாத அளவுக்கு உள்ளது என்று சுத்த மனதுடன் ஒப்புக்கொள்ள வைக்கும் சின்ன நிகழ்வுகள் கூட அதிசயம் தான்!

எனது வாழ்வில் நடந்த சில அதியங்களில் தொகுப்பு இதோ!

1. கேளம்பாக்கம் பற்றி ஒரு சிறிதும் அறியாது, சென்னையில் தங்கிருந்த நான், கேளம்பாக்கத்தை எனது வாழ்விடமாக தேர்ந்தெடுத்ததே அதிசயம்தான்! கேளம்பாக்கத்திலுள்ள ஒருவர் கூட தெரியாத நிலையில், நானாகவே மனதில் நினைத்து பஸ் ஏறி கேளம்பாக்கத்தில் இறங்கினேன். எடுத்த எல்லா முயற்சிகளும் தோல்வியுற, கேளம்பாக்கத்திலிருந்து பெசன்ட் நகர் மாதா கோயில், பின்னர் அங்கிருந்து மகாபலிபுரம் வரை ஜெபமாலை ஜெபித்த நிலையில் நடந்து செல்ல, மகாபலிபுர எல்லையில் மயங்கி விழுந்தது இப்பொழுதும் நினைவுக்கு வருகிறது. நினைவு தெளிந்த பின், பஸ் ஏறி நாகை வேளாங்கண்ணி ஆலயம் சென்று பிரார்த்தனை செய்தேன். கிராம மக்களுக்காக வளர்ச்சி பணிகள் செய்வதற்கான நிதியை பெற்று அதனை குறிப்பிடப்பட்ட திட்டங்களின் மூலம் செயல் படுத்த வேண்டும் என்பதே எனது நோக்கம் அதற்கான அனைத்து செயல்களும் கச்சிதமாக முடிந்தாலும், இம்முயற்சிகளுக்கு உதவி செய்வேன் என்று உறுதி செய்த ஒரு சில 'பெரியவர்கள்' கூட எனக்கு எதிராக திரை மறைவில் காய் நகர்த்தி நான் எனது இலக்கை அடைய முடியாத படி செய்ததும் நினைவுக்கு வருகிறது. தோல்வி தொடர்ந்த நிலையில், இறைவனே துணை என்றிருந்த எனக்கு ஒரு கனவு தோன்றியது. மாதா சப்பரப்பவனியுடன் நான் வசித்த தெரு வழியாக வலம் வருவதாக கனவு!

ஒரே மாதத்தில் எனக்கு பரிந்துரை செய்ய மறுத்த சென்னை இயக்குனரை மீறி டெல்லி நிறுவனம் அற்புத விதமாக முதல் திட்ட ஒப்புதலுடன் முதல் தவணையும் அனுப்பி, காலூன்றியது எனது முதல் முயற்சி. மாதா மூலம் நடைபெற்ற முதல் அதிசயம்.

2. இந்த நிதி வருவதற்கு இரு வருடங்களுக்கு முன்பே, கேளம்பாக்கத்தில் தங்கிருந்த அந்த கால கட்டத்தில், சென்னை வாழ் டுமிங்குப்பத்தைச் சேர்ந்த சேரி வாழ் மனிதரை, அவரது ஷயரோக (TB) வியாதியைக் குணப்படுத்த வேண்டி, நானே ஒரு ஆட்டோவில் ஏற்றி, தாம்பரம் சானிட்டோரிய ஆஸ்பத்திரியில் சேர்த்தேன்.

அடுத்த ஒரு மாதத்தில் அதே வியாதி என்னைத் தொற்றவே, மருத்துவரை அணுகினேன்.

ஸ்ட்ரெப்டோமைசின் மாத்திரைகள் உட்பட, ஒவ்வொரு முறையும், சிறியதும் பெரியதுமாக உள்ளங்கை குழி அளவுக்கான மாத்திரைகள் தினமும் உண்ணுவதற்கு பரிந்துரைத்தார்.

சில மாதங்களில் அவ்வளவு மாத்திரைகளை வாங்க, வழிப்படாததால் அவவ்வப்போது ஓரிரு நாட்கள் மாத்திரமே உண்ணாது தவறிய காரணத்தால் நோய் முற்றியது.

இதற்கிடையில், எனக்கு சமீப காலமாக, சென்னையை சேர்ந்த திருமணம் ஆகாது வீட்டிலிருந்தே மருத்துவ ஆலோசனை கூறி வந்திருந்தவரும் அடுத்தவங்களுக்காகவே வாழ்ந்து வந்த ஒரு மதிப்புக்குரிய சென்னை மருத்துவரான டாக்டர் கிளமெண்ட் ரெட்டி, மீண்டும் என்னை பரிசோதித்து, 'மேலே குறிபிட்ட மாத்திரை எனது உடம்புக்கு செயல்படாது என்றவர் 'ஸ்டெப்டோமைசின்' மாத்திரைகளை பரிந்துரைக்கு அதனைச் சாப்பிட ஆரம்பித்தேன்.

சில மாதங்கள் ஒழுங்காக சாப்பிட்டு வந்த நான், வழக்கம் போல ஒரு சில நாட்கள் மட்டுமே மேற்படி மாத்திரையை உபயோகிக்காத காரணத்தால் மீண்டும் நோய் முற்றியது. எங்களது அண்ணன் டாக்டர் லாரன்ஸ் இதனை கேள்விப்பட்டு, கேரளா ராமங்குளங்கர என்ற ஊரில், தான் வைத்திருந்த மருத்துவமனைக்கு என்னை வரவழைத்தார். எல்லா சோதனைகளும் வேற ஒரு ஆஸ்பத்திரியைச் சேர்ந்த ஷயரோக மருத்துவ நிபுணரால் பரிசோதிக்கப்பட்டு 'ஈத்தாம்பியூட்டால்' மாத்திரைகள் அடுத்த கட்டமாக பரிந்துரைக்கப்பட்டது.

சில மாதங்கள் கழிந்து, திடீரென்று கண் பார்வை சிறிது மங்கவே, மீண்டும் டாக்டர் கிளமெண்ட் ரெட்டியிடம் ஓட, அவர் என்னை சோதித்து அவரைக் கேட்காமல் மேற்படி மாத்திரையை அளவுக்கதிகமாக உபயோகித்த தவறுக்காக என்னைக் கடிந்து கொண்டு, என்னைக் காப்பாற்ற ஒரே வழி 'ரிஃபேம்...' என்று ஆரம்பிக்கும் மாத்திரைகள் தான் இனி உங்கள் உயிரைக் காப்பாற்ற முடியும். இது ஒன்றுதான் கடைசி முயற்சி என்றார்.

ஆனால், இதனைச் சாப்பிட்டால், உடம்பைக் கவனிக்க ஆகும் உணவுச் செலவு மற்றும் பிற வழிமுறைகளை கேட்டதும் எனக்கு தலை சுற்றியது.

மேலும் 20 க்கும் மேல் எடுக்கப்பட்ட எனது 'x ray'க்கள் மற்றும் 'ஸ்டெப்டோமைசின்', 'ஈத்தாம்பியூட்டால்' மாத்திரைகளை அளவுக்கதிகமாக சாப்பிட்டு வந்ததால் உடம்புக்கு ஏற்பட்ட பாதிப்பு நிலை, இப்போது 3வது நகர்வு மாத்திரையான 'ரிஃபேம்...' மாத்திரைகள் சாப்பிடபோவதால், உயிர் காப்பாற்றப் பட்டாலும், இரத்த மண்டலம், சுயநினைவு இழப்பு, நரம்பு மண்டல பாதிப்பு ஆகியவை ஏற்படும்.

சராசரி மனிதனாக வாழ முடியாது என்று கூறிவிட்டு, வெவ்வேறு பரிசோதனைகளை, பரிசோதனைக் கூடத்திற்குச் சென்று எடுக்கச் சொன்னார்.

திருமணம் செய்யாது, சமூக வாழ்வுக்கு அற்பணித்த அவரே சில 'குப்பி'களைக் கொடுத்து அதில் சளி போன்ற மாதிரிகளை சேகரித்து வெளியிடத்திலுள்ள குறிபிட்ட பரிசோதனை கூடத்தில் 'Test' எடுத்து விட்டு வருமாறு கூறினார்.

அவர் கூறியபடியே மேற்படி குப்பிகளை கையில் சுமந்து அவரது பெரிய வீட்டின் சுற்றுச்சுவரைத் தாண்டி 10 அடி தூரம் சென்ற எனக்கு கண்களில் நீர் முட்டியது!

என்ன செய்வது என்று, யோசித்தேன். ஐ.சி.டி.எஸ் தொண்டு நிறுவனம், அரசில் பதிவு பெற்றிருந்தாலும் எந்த நிதியும் வராத நிலை மாத்திரைச் செலவு, கூடுதலான சத்துமிகுந்த உணவு வகைகளில் தேவை... தலை சுற்றியது!

தெருவில் நடந்த நிலையில், மீண்டும் திரும்பிச் சென்ற நான் டாக்டர் இல்லத்தின் சுற்றுச் சுவர் ஓரமாக இருந்த கழிவு நீர் ஓடையில், அந்த குப்பிகளை வீசிய நிலையில், என் கண்கள் தாமாகவே வானத்தை நோக்கிப் பார்த்தன!

'இயேசுவே, நீர் உண்மையான

கடவுள்தானே! உமக்காக நான் இதுவரை தவறாத வாழ்வு வாழ்ந்த எனக்கு இதுவா கதி. நீர் எனது வாழ்வுக்கு அங்கீகாரம் செய்வதாக இருந்தால், எனது வியாதியை சுகமாக்கும். இல்லையென்றால் செத்துப் போகிறேன்! என்று சிறிய, வைராக்கித்துடனான ஜெபம் செய்து விட்டு கேளம்பாக்கம் அடைந்தேன்.

எந்த மருந்தும் சாப்பிடவில்லை. எந்த மருத்துவரையும் நாடுவதாக இல்லை.

இரண்டு மூன்று நாள் கழிந்த பின்தான், எனது உடம்பில் ஏற்பட்ட மாற்றத்தை உணர்ந்தேன்.

இருமல் இல்லை; சளி இல்லை, நடு வயிற்றில் ஏற்படும் நெஞ்சுவலி இல்லை, குறிப்பாக இரத்த வாந்தியுமில்லை.

மூச்சை நன்றாக இழுத்து விட்டுப் பார்த்தேன். ஒரு வலியுமில்லை.சிரமமுமில்லை.

இயேசுவே மெய்யான தேவன் என்பதை உணர்ந்தேன்.

3.ஐ.சி.டி.எஸ் வெற்றிகரமாக ஆரம்பிக் கப்பட்டு சிறிய அளவுக்கு, எல்லா கிராமங்களிலும் காலுன்ற நேரத்தில், எங்கிருந்தோ நூற்றுக்கனக்கான எதிரிகள் எழும்பினார்கள். உள்ளூரில் பெரும்பான்மையாக இருந்த இந்த மனிதர்கள் தனது ஜாதி பலத்தால் பெரும் எண்ணிக்கையில் என்முன் திரண்டார்கள்.

ஒருமுறை நூற்றுக்கும் மேற்பட்டோர், மாதா கோயில் வாசலில் மடக்கி பஞ்சாயத்தும் செய்தார்கள். தன்னந்தனியாக அகப்பட்ட நான் தப்பித்தது அதிசயம்.

அதன்பின் என்னிடம் பணியிலிருந்த சுமார் 80க்கு மேற்பட்ட எனது பணியாளர்களை தூண்டி விட்டு, எல்லாருமாக எனது அலுவலக கூட்ட அரங்கில் என்னை எதிர்த்தார்கள்.

நிலைமையைப் புரிந்து கொண்ட எனக்கு, கண்ணில் தெரிந்தது தையூர் கோமாநகரைச் சேர்ந்த பணியாளர் சாமுவேல் கையிலிருந்த பைபிள்!

அப்போது தான், எனக்கு ஞாபகம் வந்தது. வேறு காரியத்துக்காக ஜெபம் செய்ய 'Jesus calls' நிறுவனத்துக்கு சில மாதங்கள் முன்புதான் ஜெபம் வேண்டிய விண்ணப்பக் கடிதம் எழுதியிருந்தது.

அந்த கடிதத்திற்கு பதில் கடிதமாக சகோதரர் டி.ஜி.எஸ். தினகரன் அவராகவே கையெழுத்திட்டு அனுப்பிய பதில் கடிதம் ஞாபகத்துக்கு வந்தது.

கூட்டத்தை அமர்த்திவிட்டு, விடு விடுவென வீடு சென்று கடிதத்தைத் தேடி எடுத்து வந்த நான் கூட்டத்தினருக்குக் கடிதத்தை எடுத்துக் காண்பித்தேன்.

“சிறுமைப்பட்டவர் மேல் சிந்தையிள்ளவன் பாக்கியவான்” தீங்கு நாளில் அவனை விடுவிப்பார் கர்த்தர் அவனை பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார். பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான். அவர் சத்துருக்களின் இஸ்டத்திற்கு நீர் அவனை ஒப்புக்கொடீர்” என்பதாக முடிந்தது, சகோதரர் டி.ஜி.எஸ் எனக்குத் தெரிவித்திருந்த தீர்க்கதரிசன வசனம்!

அவருக்கு முன்னர் நானெழுதிய கடிதத்தில் ஒரு வார்த்தை கூட எதிரிகளது நடவடிக்கை பற்றி தெரிவித்திருக்கவில்லை என்பது வேறு விஷயம்!

கூட்டத்தினரிடம் நான் கூறினேன் “நான் உண்மையானவன் என்று நீங்கள் நம்பினால், இந்த வாசிக்கப்பட்ட வசனம் உண்மையானது என்றால் மட்டும், நாளை, இங்கு வாருங்கள். நீங்கள், ஒரு சேர வந்தால் மட்டுமே ஐ.சி.டி.எஸ் அரங்க வாசல் திறக்கும். ஒருவர் வரவில்லை என்றாலும் கூட, அலுவலகத்தை நிரந்தரமாக மூடிவிட்டு என் ஊர் பக்கம் போய் விடுவேன்” என்றேன்.

மறுநாள்! என்னை கேள்வி கேட்ட முக்கியஸ்தர்கள் உட்பட, அனைவரும் வந்து சேரவே அலுவலகம் திறந்தது; நிறுவன வேலைகள் களை கட்டியது! இது சகோதரர் டி.ஜி.எஸ். தினகரன் எனக்காக ஜெபம் செய்து அனுப்பியிருந்த அந்த பைபிள் வசனத்தின் வலிமை என்பதை உணர்ந்தேன்.

4. அதன் பின்னரும், வெளி எதிரிகள் அடங்கிய பாடில்லை! அவர்களது ஜாதியைக் குறித்து நான் சொல்லாத வார்த்தைகளை சொன்னதாக, சாலை மறியல் செய்து கேளம்பாக்கத்தை ஸ்தம்பிக்க வைத்தார்கள் எல்லா அம்பேத்கர் சங்கங்களையும் திரட்டிய

இந்த பழைய எதிரிகள்.

எனது அலுவலகத்துக்கு எதிரிலே அவர்கள் அமைந்திருந்த அம்பேத்பர் குடிசையை அவர்களே இரவில் தீ வைத்து விட்டு பழியை என்மேல் போட்டார்கள்.

மறுநாள் விடிந்த பின்னர் அதனைக் கேள்விப்பட்டு, ஒரு அதிகாரியைத் தொடர்பு கொண்டேன். அவர் தவைமறைவாக இருக்க சென்னை வரச் சொன்னார்.

அவரது ஆலோசனையின் பேரில் நடந்து கொண்டேன்.

இதற்கிடையில் மூன்று விதமான, ஜாதிக்கு எதிரான 'உடனடி கைது' பிரிவில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, போலீஸ் என்னைத் தேடியது. தேடப்படும் குற்றவாளியாக என்னை அறிவித்தது.

70 நாட்கள் திருச்சியில் தங்கியிருந்து தினமும் அங்குள்ள காவல் நிலையத்தில் கையெழுத்திட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது!

தினமும் காலை அங்குள்ள மாதா கோவிலுக்குச் சென்று, திருப்பலியில் கலந்து கொள்வதை வாடிக்கையாக வைத்திருந்தேன்.

இதற்கிடையில், கேளம்பாக்கத்தைச் சுற்றியுள்ள, சுமார் 40 கிராமங்களிலுள்ள மக்களது சாட்சியத்தின் அடிப்படையில் கோர்ட் என்னை விடுவித்தது.

விடுவித்த மறுநாள் எனக்கு ஜெர்மணியின் நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட 'அர்மதா' வெள்ளை நிற ஜீப்பை சென்னையில் 'டெலிவரி' எடுத்துக் கொண்டு, எனது பனியாளர்கள் சிலருடன் காரில் பயணித்து எனது அலுவலக சாலையில் நுழைந்தேன்.

அதே சாலையில், அதே எதிரிகள் வேறொரு இடத்தில் புதிய அலுவலகத்துக் கொட்டைகையைக் கட்டிக் கொண்டிருந்தவர்கள் பார்க்கும் வகையில், சரியான சமயத்தை ஏற்படுத்தித் தந்தார் இறைவன்! அவரை மனதார வணங்கினேன்!!

5. அதன்பின்னர் வடவை மாதா குரலோலி ஆரம்பிக்கும் எண்ணம் எனக்கு ஏற்பட்டது.

ஆரம்பத்தில். வடக்கன்குளம் பங்குமக்கள் ஒத்துழைப்பு தந்தார்கள். அதனால் பங்கு சாமியாரும் வரவேற்றார்.

அதன்பின் மூன்று வருடங்களில் சாமியார், எந்த ஒரு ஆதரவு தராத நிலையில், நான் மட்டும் தனியாக இருந்து திரு. ஜேம்ஸ் மார்ட்டின் போன்றோரது ஆதரவு வார்த்தைகளால் பலம் பெற்று புத்தகத்தை வெளியிட்டு, வடவை மக்களுக்கு விநியோகித்தேன்.

ஆனால், கோயில் ஸ்டாலில் புத்தகம் வைக்க திரு. இக்னேஷியல் கனகராஜன் போன்ற ஊர் பிரமுகர்கள் பக்க பலமாக இருந்ததால் அந்த முயற்சி சில காலம் ஓடியது!

அடுத்த மூன்று வருடத்தில், இலவசமாக புத்தகத்தை ஊரில் விநியோகம் செய்யக்கூட ஆளில்லை!

சென்னையிலும் நான் தனியாக அச்சிட்டு. வடக்கன்குளம் சென்று தனியாளகவே விநியோகம் செய்தேன்.

அந்த வருடங்களில் யாராவது ஒருவரை தேவன் எனக்கு காண்பித்தார்.

ஊர் மக்கள் யாரும் எதிர்க்கவில்லை. அவர்களை குறை சொல்லி பயனுமில்லை! புத்தகத்தை ரசித்தார்கள்! அதுமட்டுமே நடந்தது.

ஆனால், ஒரு வீடு தவறாது, இந்து மக்கள் உட்பட எல்லோரும் கேட்டு வாங்கியதுதான் மாதாவின் புதுமை!

அப்போதுதான் மூன்று பேர் புதிதாக புத்தக தயாரிப்பு, அச்சிடுதல், விநியோகித்தல் ஆகியவற்றுக்கான ஒத்துழைப்பை எனக்கு தந்தார்கள்!

இந்த வருட 27வது வெளியீடு வரை கடந்த சுமார் 12 வருடங்களாக இந்த மூவர் இல்லை என்றால், இந்தப் புத்தகம் வெளியிடுவதற்கு மிகுந்த சிரமப்பட்டிருப்பேன்.

ஒவ்வொரு புத்தகம் வெளியிடப்படும் வரை ஏற்படும் பல்வேறு சிரமங்களைத் தாண்டிதான் இந்த வடவைமாதா குரலொலி இத்தனை வருடங்களாக வெளிவந்து கொண்டிருக்கிறது!

●

# கேட்டதும் கிடைக்குமா?

கண்டிப்பாக கிடைக்கும்!

ஆனால், அதற்கு ஒரு விலை கொடுக்க வேண்டும்.!

என்ன விலை?

நம்பிக்கை, அதுவும் அசாத்திய நம்பிக்கை!

கிறிஸ்தவன் தான் நான்... ஆனால் கிடைக்க வில்லை என்கிறீர்களா!

எப்படி கேட்கிறோம் என்பதுதான் பிரச்சினையே...!

கண்டிப்பாக நடக்கும் என்ற ஆழ்ந்த விசுவாசம் இல்லாமல் சும்மா நாமும் கேட்டு வைப்போமே என்ற உள்ளுணர்வு அவனுக்கு தோன்றிவிட்டால் அந்தக் காரியம் எப்படி நடக்கும் ?

அட போங்கப்பா... நாமெல்லாம் மனிதர்கள்...! சூழ்நிலைக்குத் தகுந்தபடிதானே நாமும் கேட்க முடியும். இந்த கொடுமையான உலகத்திலே அப்படி குருட்டுத் தனமாக நம்ப முடியுமா? அப்படியே நம்பினாலும் ஏதோ ஒன்று நம்பிக்கையில்லாமல் செய்து விடுகிறது என்றால் அதுவும் சரிதான்.!

ஆனால் மனிதனின் பலவீனம் உறுதியற்ற தன்மை அவருக்கு (இறைவனுக்கு) தெரியும்.!

அதற்கு அவன் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான்.!

நம்பிக்கை குறைந்ததையே இறைவனிடம் கூறி மன்னிப்பு கேட்டு விட்டால், உடன்தானே நம்பிக்கை கொப்பளிக்கும்!!

ஆஹா, இப்போது உடனே கிடைத்து விடுமா?

அப்படியாக மந்திரத்தில் மாங்காய் காய்த்து விடும்தானே என்றால் அதுவுமில்லை.!

நம்பிக்கை வைப்பதோடு பொறுமையோடு காத்திருக்க வேண்டும்.!

இந்த உண்மையை மட்டும் உணர்வுப்பூர்வமாக உணர்ந்து விட்டால் அவன் காட்டில்தான் மழை! இதன் கால அளவு, நமது நம்பிக்கையின் அளவு, அந்த வேண்டுதலில் தன்மையைப் பொறுத்தேயாகும். ஒரே நொடியில் கூட நடக்கும். முக்கியமான ஒன்று! நமது நடத்தை சுத்தமாக, நேர்மையாக இருந்தால், மனது தெளிவாக இருக்கும்! இந்த தெளிவுள்ள மனிதர்கள் கேட்டால், அதன் பலனே தனி!

உரிய நேரத்தில் கண்டிப்பாக கிடைக்கும். கேட்டது கிடைக்கும் வரை தாங்குகின்ற சக்தி தாராளமாய் கிடைக்கும்.

கேட்டதை விட அதிமாவே கிடைக்கும்.! ●

## ஓயாத சர்ச்சை

ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள் இந்த டூரின் நகர துணியை ஆராய்ந்தார்கள்.

ஆடை நெய்தமுறை, ஆடையில் ஒட்டிக்கொண்ட மகரந்தம், ஆணி அடித்ததாக துணியில் பதிந்த தடம், எக்ஸ்ரே பகுப்பாய்வு துணியில் ஒட்டிக்கொண்டிருந்த மணல் துணியிலுள்ள பெயர் ஆகியவை உட்பட நூற்றுக்கணக்கான சோதனைகள் மூலம் இந்த துணியே உண்மையா அல்லது யாரும் உருவாக்கினார்களா என்ற ஆராய்ச்சிகள் சமீபம் வரை முடிக்கிவிடப்பட்டு இறுதியில் அதாவது இந்த வருடத்தின்- 2020 ஏப்ரலில் வெளியான தகவல், இந்த துணி இயேசுவின் உடையது என்பதுதான்.

விரிவாகப் பாருங்கள் - 39ஆம் பக்கம்



இறை இயேசுவின்
சக்தி பெற்று

# அதிசயம் நிறைந்த புனிதர் கூட்டம்

## கிறிஸ்தவத்தின் பெருமை...!

கத்தோலிக்கக் கிறிஸ்துவ உலகை ஆராய்ந்தால் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட புனிதர்கள், ஆங்காங்கே தோன்றி, இயேசுவின் போதனையைப் போதித்து, கிறிஸ்தவத்துக்கு வலு சேர்ந்திருக்கிறார்கள்.

பொதுவாக இயேசு கிறிஸ்து என்ற இந்த 'சாமி' அகில உலகைப் படைத்த மாபரர், ராஜாதி ராஜா, அல்பாவும் ஒமேகாவுமானவர். அண்ட சராசரங்களை தன் கைப்பிடியிலே வைத்திருப்பவர்.

இப்படிப்பட்ட பூலோக மேலோக அதிபதி, தான் படைத்த மனிதர்களிடமிருந்து தொடர்ந்த அன்பை எதிர்பார்க்கிறார்.

அவ்வாறு அன்பு செலுத்துபவர்களிடம் தனது அன்பை மழையாகக் கொட்டுகிறார்.

விளக்கமாக சொன்னால், தாம் அற்புதம் செய்கின்றது போக அந்த புனித தன்மை கொண்ட அன்பு செய்யும் மனிதப் புனிதர்களுக்கு அதிசயம் செய்யும் சக்தியை வாரி வழங்கி கௌரவிக்கிறார். ஏராளமான வரங்களை







அள்ளித் தந்து அவர்களை உயர்த்துகிறார்.

இப்படித்தான் உலகுக்கு புனிதர்கள் கிடைக்கிறார்கள்!

இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான சக்தி படைத்தவர்களாக இருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து பார்த்தால்தான் தெரியும்.

நாமும் ஆராய்ந்தோம். அதன் விளைவே இந்த புனிதர்களின் அதிசய செயல்பாடுகளின் இந்த தொகுப்பு!

## பறக்கும் புனிதர்கள்..

ஐந்து புனிதர்கள் பற்றிய விவரம் நமக்கு கிடைத்திருக்கிறது.

இந்த புனிதர்கள் பூமியிலிருந்து பல அடிதூரம் உயர்த்துவார்; ஒரு சிலரை பறவை போன்று பறக்கச் செய்வார்!

அவ்வாறு பறந்து, பறந்து உலகை வியக்கச் செய்தவர் தான் புனித ஜோசப் குப்பாட்டினோ!

இவர் என்ன செய்வாராம், தரை மட்டத்திலிருந்து கட்டடத்தின் உயர்மட்டம் வரை விர்ரென்று பறப்பார். சில சமயங்களின் பல மணி நேரம் பறந்த நிலையிலேயே மேல் மட்டத்திலே ஒட்டிக் கொண்டது போன்று தோற்றமளிப்பார்.

புனித அல்போன்ஸ் லிகோரி இவர் பறக்கும் விதம், வித்தியாசமானது இவரிடம் ஆசி பெற வருபவர்களின் தலைகளின் மேலே பறந்த நிலையில் இருப்பார்.

அவ்வாறே ஒரு கூட்டம் மக்களுக்கு பிரசங்கம் செய்யும் சந்தர்ப்பங்களில், அந்த மைதானத்தின் பல இடங்களில் பறந்து திரிவார்.

புனித மார்ட்டின் டி போரஸ், புனித பியோ ஆகியோரும் இத்தகைய வலிமை பெற்றிருந்தனர்.

## இயேசுவின் ஐந்து திருக் காயங்களைப் பெற்ற புனிதர்கள்..

இயேசுவின் ஐந்து திருக்காயங்களை உடலெங்கும் தாங்கி இரத்தம், சொட்டசொட்ட வாழ்ந்து வந்த புனிதர்கள் பலர்.




புனித பியோ

இதுவரை 62க்கும் மேற்பட்ட புனிதர்கள் தனது உடலில் இரத்தக் காயங்களைக் கொண்டவர்களாக வலம் வந்துள்ளார்கள் என்று நமக்குத் தெரிகிறது.

அது என்ன இரத்தக்காயங்கள்? இயேசுவை சிலுவையில் அறைந்தார்களல்லவா? அவரது இரண்டு கைகளை ஆணியடித்து சிலுவை மரத்தில் மாட்டினார்கள்.



புனித ஜெம்மா

இரண்டு கால்களையும் ஆணியடித்து தொங்க விட்டார்கள்.

விலாவில் ஈட்டியால் குத்தினார்கள்!, எப்படி இருக்கும் இந்த காயங்கள்? இதே ஐந்து காயங்களும் அவரை நேசிக்கும் மனிதப் புனிதர்களின் உடம்பில் தோன்றும் போது ஏற்படும் அந்த காயங்களின் தன்மை என்னவென்று பலரை ஆராய்ந்ததன் விளைவாக நமக்கு கிடைத்த தகவல்கள் இதோ!

இயேசுவின் உடலில் எந்தெந்த இடங்களில் இரத்த காயங்கள் இருந்ததோ அந்தந்த இடங்களில் இந்த புனிதர்களுக்கும் காயங்கள் தோன்றும்.

ஒரு சில புனிதர்களுக்கு சில குறிப்பிட்ட தினங்கள், குறிப்பிட்ட வார நாட்களில் தோன்றும்.

வேறு சிலருக்கோ அவர்கள் சாகும்வரை அந்த காயங்கள் இருந்துள்ளன இந்த காயங்கள் தாங்க இயலாத வலியைக் கொடுக்கும்.

இந்த காயங்களினால் ஒருபோதும் துர்நாற்றம் ஏற்படாது. காயங்களிலிருந்து புறப்படும் ஒருவித நறுமணத்தின் தன்மையும் வீரியமும் ஆளாளுக்கு வேறுபடும்.

இந்த நிகழ்வை ஸ்டிக் மேட்டா (Stigmata) என்றும் கூறுவர்.

## இறந்தும் உடல் அழுகாத நிலையில் 250 புனிதர்கள்

இன்றைய கணக்கெடுப்பின் படி உலகம் முழுவதும் புனிதர்களாக இனங்கண்டு கொள்ளப்பவர்களுள் 250 பேரின் முழு உடலோ உடலின் பகுதியோ ஒரு சிறிதும் அழுகாத நிலையில் உள்ளன என்றால் இயேசுவே இறைவன் என்ற உண்மைக்கு சாட்சி அல்லவா?

இந்தியாவுக்கு நற்செய்தி அறிவிக்க வந்தவர்தாம் புனித பிரான்ஸில் சேவியர் என்ற புனிதர்.

ஸ்பெயின் நாட்டில் பிறந்து, பல்வேறு நாடுகள் சென்று, பெரும்பாலான இறைப்பணியை இந்தியாவிலுள்ள கோவா மாநிலத்தில் ஆற்றி, இறுதியில் சீனாவில் மரித்தவர்தாம் நமது புனிதர்.






அந்தக் காலத்தில் ஆகாய விமானமோ ரயில் சேவைகளா இருந்தது?

வெறும் கால்நடைதான் அல்லது கடல் மார்க்கம் தான்.!

பிரான்ஸிஸ் சேவியர் மாத்திரமல்ல, உலக மெங்குமுள்ள எல்லா மனிதர்களும் இந்த வகையில் ஆளாளுக்கு கிடைத்த நாடுகளுக்கே சென்று உடலை வருத்திய நிலையில் பயணப்பட்டு சென்றதன் நோக்கமே உண்மையை உலகுக்கு அறிவிக்க வேண்டும். என்பதற்காகவே!

இயேசுவே கடவுள் என்று கண்டு கொண்டுவிட்ட மனிதனுக்கு துரும்பும் ஆயுதம்தானே!

புனித பிரான்ஸிஸ் சேவியர் நற்செய்தியை போதிக்கும் போது எப்போதுமே கையில் வைத்திருப்பது இயேசுவின் உருவம் தாங்கிய சிலுவைதான்.!!

ஒருமுறை, மலாக்கா தீவுகளுக்கு கடல் மார்க்கமாக போதகம் செய்ய புறப்பட்ட போது அவரது கையிருந்த சிலுவை கை தவறி கடலுக்குள் விழுந்து விட்டது. எடுக்க முடியவில்லை.

சில நாள் பயணப்பட்டு மலாக்கா கடற்கரையில் இறங்கிய போதுதான் அந்த அற்புதம் நடந்தது. அவர் தவறவிட்ட அதே சிலுவையை வாயில் கவ்விக் கொண்டபடி கடலினுள்ளேயிருந்து வெளிப்பட்டது ஒரு நண்டு!

மணலைக் கடந்து வந்த நண்டிடமிருந்து சிலுவையைப் பெற்றுக் கொண்டார் புனிதர்.

அவரது அழியாத





**அவர் சில நாள் முன்பு கடலில் தவறவிட்ட அதே சிலுவையை வாயில் கவ்விக் கொண்டபடி தான் சேரவேண்டிய இடத்தில் இறங்கும்போது, கடலினுள்ளேயிருந்து வெளிப்பட்டது ஒரு நண்டு...**

## புனித தொன்போஸ்கோவின் அழுகாத கை





*உடல் கடந்த 450 ஆண்டுகளாக ஒரு சில சுருக்கங்களிடையே அப்படி இன்றும் உடல் அப்படியே உள்ளது, கோவாவிலுள்ள பாம் ஜீசஸ் 'தேவாலயத்தில்'*

*தொன்பாஸ்கோ சபை சுமார் 40,000 ஆண் மற்றும் பெண் துறவியர்கள் கொண்ட மாபெரும் ஸ்தாபனங்கள். இதை நிறுவிய புனித தொன்போஸ்கோ தானிருந்த காலத்திலேயே முடமானவர்களை நடக்க வைத்தார். தீராத வியாதிகளைத் தீர்த்தார். ஏன் இறந்தவரைக்கூட ஒருமுறை உயிரோடெழுப்பினார்.*

*நடக்கும் காரியங்களை முன்னறிவித்த இந்த புனிதரது வலது கை மட்டும் இன்றும் உயிரோடுள்ளது.*

*அவ்வப்போது உடலின் மீதி பாகங்கள் மெழுகில் செய்யப்பட்ட நிலையில் உலகெங்கும் எடுத்துச் செல்லப்படுகிறது புனிதரின் உடல்!*

*புனித அவிலாதெரசம்மாள்!!*

*ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த இவர் கார்மேல் சபையில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்த கன்னியாஸ்திரி ஆவார்.*

*ஒரு தடவை இவரது உறவினர் ஒருவர் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது ஒரு பெரிய சுவர், இவர் மேல் விழுந்து அந்த இடத்திலேயே உயிழந்தார்.*

*உறவினர் அனைவரும் கதறுவதைப் பார்த்ததும் அவிலா, ஒரு காரியத்தை செய்தார்.*

*இறந்தவரின் பிணத்தை தனது இரு கைகளையும் நீட்டிய நிலையில் அதன் மேல் படுக்க வைக்கச் செய்தார்.*

*ஏற்கனவே நீட்டப்பட்டிருந்த இரு கைகளையும் வானோக்கி உயர்த்தி ஜெபித்தார்.*


*இறந்தவர் உயிர்தெழுந்தார்.!!*

*இவரது உடலும் அழியாத வண்ணம் உள்ளது*



புனிதா அவிலா



என்பதே 'இவரது சிறப்பு'

**பு**னித மரிய கொரற்றி!!

தனது 11ஆவது வயதில் கற்புக்காக உயிர் இழந்த இளம் பெண்தான் மரிய கொரற்றி.

தினமும் பலிபூசைக்குச் சென்று ஆத்தமார்த்தமாக இறைவனை வணங்கும் குணம் கொண்டவர்.

அவர் வீட்டுக்கு அருகாமையிலுள்ள ஒருவன், தனது ஆசைக்கு இணங்க மறுத்த காரணத்தால் அவரை 14 முறை கத்தியால் குத்தி கொலை செய்தான்.

இறந்த பின்னர் பல வருடங்கழித்து ஒரு கனவில் மூலம் அவனை மன்னித்து விட்டதாக அறிவிக்கவே, அந்த கொலைகாரன், 30 வருட சிறைத் தண்டனையை முடித்து விட்டு, அவனும் ஒரு சன்னியாச மடத்தில் சேர்ந்து சகோதரராக மாறி விட்டாரென்பதும் ஒரு ஆச்சரியமே.!!

**ப**றக்கும் புனிதர்கள், இயேசுவின் திருக்காயங்களை உடலில் தாங்கிய புனிதர்கள், இறந்தும் உடலுறுப்புகள் அழியாத நிலையிலுள்ள புனிதர்கள் ஆகியோரைப் பார்த்தோம்.

***சுமார் 400க்கும் மேற்பட்ட இறந்தவர்களை உயிரோடு எழுப்பிய புனிதர்கள் சுமார் 50 பேர் உள்ளனர்.***

அவர்களது பெயர்கள் வருமாறு புனித பிரான்ஸிஸ் பவுலோ, புனித ஜோசப் குப்பார்ட்டிகளோ, புனித கௌனாட்டினோ புனித பீட்டர் அல்காண்ட்ரா, புனித டோமினிக் பனித இக்னேஷியஸ் லயோலா புனித பிலிப் நேரி, புனித சிலுவை பவுல், புனித டொன்போஸ்கோ, புனித ஆக்னஸ், புனித மார்க் மெடோனா, புனித ரோஸ்லியா, புனித மார்ட்டின் போரஸ் புனித பிரான்ஸிஸ் சோலன்1, புனித செபஸ்டின், புனித ஜேம்ஸ் டேரண்டைஸ் , புனித சிரில், புனித பெரக்ரைன், புனித ஜெரால்ட், புனித பெலிக்ஸ், புனித பியோ, புனித லூயிஸ் பெர்நார்ட், புனித ஜான் பிரான்ஸிஸ் லியோ, புனித ஆண்ட்ரூ போபல்லா புனித பேட்ரிக்,

இதுதவிர, வேறுசில புனிதர்களும் உண்டு. புனிதர் பட்டத்துக்கு முந்திய பட்டமான ஆசிர்வதிக்கப்பட்டவர் என்ற பட்டத்தை பெற்ற சுமார் 15 பேருங்கூட இறந்த மனிதனை உயிர்தெழ வைக்கும் இறைவனது கொடையைப் பெற்றிருந்தனர்.உலகமே அழியாத வாழ்வைத் தரும் இயேசுவைப் பெற்றுக் கொண்ட புனிதர்களைப்பற்றி தெரிந்து கொண்டு அவர்களைப் போல் வாழ முயல்கிறீர்களா அல்லது உலக ஆசாபாச மனிதர்களை மாத்திரம் பின்பற்றுகிறீர்களா நீங்களே சோதித்து பார்த்துக் கொள்ளுங்கள்!!

*400க்கும் மேற்பட்ட இறந்தவர்களை உயிரோடு எழுப்பிய புனிதர்கள் சுமார் 50 பேர்*

# இயேசு உயிர்த்தது பற்றிய தற்போதைய விஞ்ஞான முடிவு என்ன ?



இயேசு உயிர்த்ததை, விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கும் ஒரே சான்று இயேசுவின் போர்வை! அவர் இறந்தபின், அவரது உடலைப் போர்வையால் போர்த்தப்பட்ட நிலையில் கல்லறைக்குள் வைத்து அடக்கம் செய்தார்களல்லவா?

அந்த போர்வை டூரின் நகரிலுள்ள தேவாலயத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது!

இந்த போர்வையை ஆராய்வதற்கென்றே ஏராளமான பல்கலைக் கழகங்கள் இன்று உலகம் முழுவதும் நிறுவப்பட்டுள்ளது.

இந்த போர்வை இயேசுவின் உயிர்ப்புக்கு எவ்வாறு சான்றாக முடியும்?


சாதாரணமாக நமது உருவம் புகைப்படமாக எவ்வாறு மாறுகிறது?


பல மடங்கு ஒளியை ஃபிளாஷ் ஆகப் பாய்ச்சப்பட்டு ஒரு இருட்டறையான கேமராவினுள் அது பிடிக்கப்படும்போது, அங்குள்ள பிலிமில் அது நெகட்டிவாக பதிகிறது. இதனை இரசாயன கலவையில் கழுவி, புகைப்படமாக்குகிறார்கள் என்பது நாமறிந்ததே!

இயேசுவை வைத்திருந்த இருட்டறையான கல்லறைதான் இங்கு கேமரா, இயேசுவைக் கொல்வதற்காக எண்ணற்ற சாட்டையடிகள், இதன் மூலம் இரத்தக் கசிவுகள் வியர்வை போன்ற பலவிதமானவை, இயேசுவின் உடலிலிருந்து வெளிப்பட்டு அவரது உடலைச் சுற்றிய போர்வையில் சில இரசாயன மாற்றங்களை ஏற்படுத்திய நிலையில் அந்த போர்வையே பிலிமின் தன்மையுடன் உருமாறியிருந்தது!

அந்த வேளையில், பாய்ச்சப்பட்ட ஒளிவெள்ளம், அந்த போர்வையை







நெகட்டிவ் பிலிமாக மாற்றிவிட்டது.


இந்த ஒளி எப்படி வந்தது? வேதாகமத்தில் இயேசு உயிர்த்தபோது சூரியனைவிட பல மடங்கு ஒளியுடன் இயேசு உயிர்த்தார் என்று கூறப்பட்டுள்ளது.

ஆக, இருட்டறையான கேமரா போன்ற கல்லறையில், உயிர்த்த இயேசுவின் ஒளி பாய, பிலிமான போர்வை, நெகட்டிவாக மாறியது•

**3டி யில் இயேசுவின் முகம்**

நவீன 3டி கம்ப்யூட்டர் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி ஓவியர் குழு இயேசுவின் முகத்தை வரைந்துள்ளது.

இதுகுறித்து லண்டனிலிருந்து வெளியாகும் டெலிகிராப் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளதாவது:



இயேசு உயிர் நீத்தபின், அவரை கல்லறையில் அடக்கம் செய்யும்போது அவரது உடல் மீது போர்த்தப்பட்டிருந்த 'லினன் ரக' துணியால் ஆன போர்வையில், அவரின் உருவம் பதிந்ததாக நம்பப்படுகிறது. அதை பயன்படுத்தி, இந்த ஓவியர் குழு, இயேசுவின் முகத்தை 3டி கம்ப்யூட்டர் தொழில்நுட்பத்தின் மூலம் வரைந்துள்ளனர்.

இதை பதிவு செய்த, டிவி சேனல் ஒன்று 'தி ரியல் பேஸ் ஆப் ஜீசஸ்' என்ற பெயரில் அதை ஒளிபரப்பியது.

இதுகுறித்து, இத்திட்டத்தின் தலைமை ஓவியரான 'ரே டவுனிங்' கூறுகையில், இயேசுவின் முகத்தை மீண்டும் வரைய விரும்பினால் அதற்கு அவரது உண்மையான முகம் தேவை?

அதற்கு, தற்போது ஆதாரமாக இருக்கும் ஒரே பொருள், இயேசுவின் உடலில் போர்த்தப்படிடருந்த அந்த போர்வைதான் என்றார்.

**எல்லாம் வல்ல தேவன் ஒரு போர்வை மூலம் தமது நிஜ முகத்தையும் தாம் உயிர்த்ததையும் நிரூபித்திருக்கும் முறையை பார்த்தால், ஆச்சரியப்படத் தோன்றுகிற தல்லவா!!**

●

*குறிப்பு: 39ஆம் பக்கத்தில் வெளிவந்துள்ள கேட்டது கிடைக்குமா என்ற கட்டுரையை வாசிப்பவர்கள், இந்தக் கட்டுரையையும் வாசித்து பயனடையுங்கள்...!*






# கேட்டது

கேட்டது கிடைப்பதற்கான ஒரு புதிய ஒரு ஈடேறும் வழியையும் சமீபத்தில் காண்பித்தார், சகோதரி மரிய பாஸ்டினா மூலம் இறைமகன் இயேசு!

**யார் இந்த பாஸ்டினா?**

போலந்து நாட்டிலுள்ள ஒரு சிற்றூரில் ஏழைக்கோலத்தில் பிறந்த அவள் அடுத்த வீட்டில் வேலை செய்யும் சாதாரண பெண்!

“நீங்கள் என்னை தேர்ந்து கொள்ள வில்லை. நான்தான் உங்களை தேர்ந்து கொண்டேன்.” (யோவான் 15.16) என்றார் இயேசு பைபிளில்

அதுபோல, இந்த பாஸ்டினா குழந்தையின் ஒவ்வொரு அசைவையும் கூட இருந்து வழி நடத்தினார். அருட் சகோதரியாகி இறைவனுக்கு பணியாற்ற பாஸ்டினாவுக்கு ஆசை, அதில் சேருவதற்குத்தான் எத்தனை தடங்கல்கள், எத்தனை சோதனைகள்! ஒரு வழியாக, அருட்சகோதரியாகி கன்னியர் மடத்தில் சேர்ந்தால்... அங்கும் பலவிதமான பிரச்சினைகளிடையே தான் வாழ முடிந்தது!

பாஸ்டினா உள்ளம் வெள்ளையாக இருந்ததுதான் இயேசுவின் அன்புக்குகாரணம்!

“நீ தாழ்ந்த நிலையிலிருந்ததாலேயே, என்னுடைய பேரிரக்கம் என்ற பெருங்கடலை உனக்கு வெளிப்படுத்தினேன். உன் போன்ற ஆன்மாக்கள் நான் விரும்பி தேடினாலும் அவை மிகக் குறைவே.”


என்மேல் நீ கொண்ட ஆழ்ந்த விசுவாசத்தின் பொருட்டே நானும் எனக்கு கொடைகளை அளிக்க முடிகிறது” என்று இயேசு ஒருநாள் பாஸ்டினாவிடம் கூறினார்.

ஒன்றல்ல, பலமுறை அவளிடம் பேசினார். ஒளி மூலம், உணர்த்துதல் மூலம், கனவுகள் மூலம், காட்சிகள் மூலம், மறைவான இடங்களில் இயேசுவின் ஐந்து திருக்காயங்கள் தோன்றி மறைவதன் மூலம், மனித மனத்தை அறியும் சக்தி மூலம், நடந்ததை, நடக்கப்போவதை, முன்னறிவிப்பதன் மூலம்.!!

இது பற்றி சக கன்னியாஸ்திரிகளிடம் பாஸ்டினா சொன்னால், அங்கும் கிண்டல் கேலி!

ஒருபுறம் அகில உலகைப் படைத்த இறைவனின் முகமுகமான நட்பு, முறுபுறம் கடின வேலை... அவமானம் கேலி கிண்டல்!

அந்த துன்பங்களை இயேசுவுக்காக சகித்து, ஒப்புக்கொடுத்ததினால் இயேசுவுக்கு அவள் மேல் இன்னும் ஈடுபாடு! இயேசு தனது இதயத்தை திறந்து காட்டினார். அன்று சிலுவையிலே தொங்கிய போது,



“ஓ... அன்பும்,
இரக்கமுள்ள இறைவா,
உமது இரக்கத்தின் ஊற்றை
உமது இருதயத்திலிருந்து
ஊற்றுவீராக,!” என்று
ஜெபிக்கச் சொன்னார்.
இயேசு

இவ்வாறு ஜெபித்தால்
நீ கேட்டதை அப்படியே
உனக்குக் கிடைக்கச்
செய்வேன்.

# கிடைத்தது

யூதர்கள் அவரை ஈட்டியால் குத்தினார்களே, அப்போது அவர் விலாவிலிருந்து புறப்பட்டதே, இரத்தமும் நீரும், அதனை அவளிடம் காட்டினார்.

“இரத்த மென்பது பாவ நிவாரணத்துக்கானது. நீரென்பது சுத்தமாக்கும் தூய்மை குணம் கொண்டது. எனது இரக்கம் அளவிட முடியாதது, அந்த இரக்கம் என் இதயத்திலிருந்து பீறிட்டுப் பாய்கின்றதைப் பார்” என்றார்.

“இதுபோன்ற படத்தை வரைந்து வைத்துக் கொள் என்று அவளுக்குப் பணித்தார். மனித இனம் எனது இந்த இரத்தத்தின் இருயத்தைப் பார்க்கட்டும், தியானிக்கட்டும், இவ்வாறு ஜெபிக்கட்டும்.” என்றார்.

“இயேசுவே என்னுடைய (பிரச்சினை) நீங்குவதற்காக இரக்கத்தின் ஊற்றாகிய உமது திருவிலாவிலிருந்து பாயும் இரத்தத்தையும் நீரையும் நான் ஆராதித்து முழுமனத்துடன் உம்மை விசுவாசிக்கிறேன்.” என்று ஜெபிக்க வேண்டும் என்றார்.

“எனது இரக்கம் கடல் போன்றது. எனது சிலுவைப் பாடுகளை தியானிக்க தியானிக்க உனது பாவம், அது எத்தனை கொடியதாயிருப்பினும் அப்படியே முற்றிலுமாக மன்னிக்கப்படும்.”

‘நீ என்ன கேட்டாலும், அதை அப்படியே எந்தவித மறுப்புமில்லாமல் தருவேன் என்றார். இயேசு பாஸ்டினாவிடம்,! அதாவது மனுக்குலத்திற்கு இதனை எடுத்துச் சொல்லவே பாஸ்டினாவை ஒரு கருவியாக தெரிந்தெடுத்தார். இயேசு!

“ஓ... அன்பும், இரக்கமுள்ள இறைவா, உமது இரக்கத்தின் ஊற்றை உமது இருதயத்திலிருந்து ஊற்றுவீராக,!” என்று ஜெபிக்கச் சொன்னார். இயேசு

“இவ்வாறு ஜெபித்தால் நீ கேட்டதை அப்படியே உனக்குக் கிடைக்கச் செய்வேன். ஏனென்றால் எனது இருதயம் தூய்மையானது. அன்பினால் நிறைந்தது. இரத்தத்தின் கடல் தாராள மனதுடையது. அளவிட முடியாதது” என்று கூறினார்.

இயேசுவின் உயிர்த்த ஞாயிறுக்கு அடுத்துவரும் ஞாயிறன்று தொடங்கி, ஒன்பது மாதங்கள் அல்லது வாரங்கள் என்று தவறாது இந்த தியானத்தைச் செய்யுமாறு இயேசு பாஸ்டினா மூலம் உலகுக்கு தெரிவித்தார்.



# உக்ரைன் போர் ஓர் எச்சரிக்கை



ஆண்டி என்ன அரசன் என்ன எல்லோருமே தனது முழு உடம்பையுமே மறைத்துக் கொள்ள குறிப்பாக மூக்கையையும் வாயையும் மூட எவ்வளவு சிரமப்பட்டார்கள்!

ஒருவர் பாக்கியில்லாமல் சமயங்களில், பெற்ற குழந்தையைக்கூட பார்க்க இயலாத கொடுமையையல்லவா சந்தித்து விட்டார்கள்! இந்த கொரோனா வைரஸ் என்ற கண்ணுக்குத் தெரியாத அரக்கனிடமிருந்து தன்னைக் காப்பற்றிக் கொள்ளத்தானே இத்தனை பாடுகள்!

அன்றைக்கு வயிறு நிறைந்தால் போதும் என்ற கூற்றின்படி, மனிதனும் அந்தந்த வேளைகளில் அந்தந்த இயற்கை பேரழிவுகளோ அந்தந்த பாடுகளோ தீர்ந்ததன் பின் அவற்றைமறந்தே விடுகிறான்.

பழைய குருடி, கதவைத் திறடி, என்பது போன்று தனது அகங்கார நெறி பிறந்த வாழ்க்கையைத் தொடருகிறான்!

இதற்கு முன்னாலும், ப்ளேக் போன்ற கொள்ளை நோயால் சுமார் 20 கோடி மக்களை 14 ஆம் நூற்றாண்டில் உலகம் சந்தித்ததுதான்!

ஆனால், 'புதிது புதிதாக யோசிக்கிறாங்க' என்பது போன்று, இதுபோன்ற சர்வ தேசப் பரவல் நோய்கள், புதிய புதிய வடிவில் வருகிறதே...!

ஏன்.. ? ஏன்?

'கல்யாணம் பண்ணிப்பார் வீட்டைக் கட்டிப்பார்' என்பது பழமொழி

'ஆண்டாண்டுகாலம் அழுது புரண்டாலும் மாண்டார் மீள்பவரோ' என்கின்றது வேறு ஒரு புதுமொழி

வாழ்வதற்காகப் பிறந்த மனிதன், தனது சராசரி வாழ்வில் ஒரு இல்லற வாழ்வை தேர்ந்தெடுத்து அதற்கு வலுசேர்க்கும் வகையில் தனது வீட்டை வடிவமைத்து, அதுவரை சேர்த்த பணத்தைக் கொண்டு வாழ்கிறான். உறைவிடத்தை கட்டிக்கொள்ள எத்தனை வருடம் உழைக்கிறான்.

அவன் நினைத்தானா, மறுநாள் காலை விடியும்போது அத்தனையும் ஒரே நொடியில் தரைமட்டமாகி தானும், இல்லாமல் போவோம் என்று..!

“பாதுகாப்பாக போரிடுவோம் உயிர்ச்சேதமே இருக்காது.”

“மக்களே ஒழிந்து கொள்ளுங்கள். உங்களைச் சுற்றியுள்ள கட்டடங்களைத்தான் நாம் குறி வைக்கிறோம் உங்களையல்ல.”

–எவ்வளவு அறிவுப்பூர்வமான மனிதாபிமான சொற்றொடர்கள்!!

உலகம் தோன்றி, மனிதன் நாகரீகமடைய, ஆரம்பித்த வேளை தொடங்கி, இன்று



வரை இதுபோன்ற அறிவுரைகளை நாம் கேட்கவில்லைதான்!

ஆனால், இப்பொழுது எங்கிருந்து கிளம்பி விட்டார் இந்த விளாடிமிர் புட்டின்..!

“இதோ, நான் இறைவனுக்கு பயந்தவன்; எங்களது சோவியத் ருஷ்ய கூட்டமைப்பில் நாங்கள் இருந்தபோது அல்லது அதற்கு முன்னர், எங்களது மூதாதையரின், கடவுள்களான பெருண், லாடா, டிஸ்பாஃக், பிலேபாக், செர்னோபாக், இது போன்று முப்பத்து முக்கோடி தேவர்களை வணங்கி வந்தோம்.



“அதன்பின், சோவியத் கூட்டமைப்பில் நாங்கள் இணைந்தபோது ‘லெனின்’ தான் எங்களுக்கு கடவுள்! கம்யூனிச அடக்குமுறை சித்தாந்தத்தை உலகம் முழுவதும் பரப்ப முயன்று, இறுதியில் எங்களது அடாவடி அரசியலால் அவையனைத்தையுமே தொலைத்து விட்டு, இப்போது பாருங்கள் எவ்வளவு மாறிவிட்டோம்.!

“ஆம் உண்மையான இறைவனைத் தேடி இயேசு என்ற பெயரை உச்சரித்து ஏன் நான் கூட ‘ஆர்த்தோடாக்ஸ்’ கிறித்தவ சபையிலிருந்து மாறி, கத்தோலிக்க சபைக்கு தாவி விட்டிருக்கிறேன்.”

கூறுவது யார்?

சாட்சாத் புடின், என்ற விளாடிமிர் புடின்தான்.

“ரஷ்ய அதிபராக தொடர்ந்து 10 வருடங்களுக்கு மேலாக இருந்து கொண்டு தனது ரகசிய வியாதியை மறைத்துக் கொண்டு கம்பீரமாக நடப்பது போன்று பாவனை காட்டிக் கொண்டு வரும் இன்றைய ரஷ்ய அதிபர் தான் இவர்.!

‘பேர் சொல்லும் பிள்ளையைப் பெற்று விட்டேன்’. என்று பெருமைப்படும் காலம் போய் என்னுடைய பேர் உலகம் முழுவதும் பேசப்படுகிறது பார்த்தீங்களா...” என்று கொக்கரிக்கிறார் இந்த புடின்...!


“ஐயோ இந்த பாக்கியம் எனக்கு வரவில்லையே” என்று புலம்பித் தீர்க்கிறார்கள் மூன்று பேர்...!

‘யார்’ இந்த பிரகஸ்பதிகள்...?


நமது வடகொரிய அதிபர் கிம்ஜாங் உன் மற்றும் சீன அதிபர் ஜின் பிங், போதாக்குறைக்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன்... ஆகிய மூன்று பேர்தான் அவர்கள்!

‘நான் அப்படியல்ல எங்க பெரும்பான்மை மதமே கிறிஸ்தவம்தான்!. அந்த சீனாக்காரனும் கொரியாக்காரனும்தான் தன்னையே கடவுள் என்று கூறிக்கொள்ளும் சர்வாதிகாரத் தனமாக நாட்டை ஆளுகிறார்கள் ஆனால் நான்தான் உண்மையான ஜனநாயகவாதி... உலகுக்கே பெரியண்ணன்...!’

என்று தன்னைத்தானே பெருமைப் படுத்திக் கொள்ளுகிறார், இந்த ஜோ பைடன்!


விளாடிமிர் புடின்


செலன்ஸ்கி


ஜோ பைடன்!


கிம்ஜாங் உன்


ஜின் பிங்,

“உலகம் வாழ்வதற்கும் அழிவதற்கும் நாங்கள்தான் காரணம். என்று அந்த அளவுக்கு பெருமை படுகிறார்கள். இவர்கள்.

உக்ரைன்...!!

என்ன பாவம் செய்தார்கள் இவர்கள்?

‘எனது பல்பத்தை நீ ஏன் உடைத்தாய்’ என்று இரண்டு சிறுவர்கள் சண்டையிடுவது

போல் உப்புசப்பு இல்லாத காரியத்துக்காக, அதாவது, நேட்டோ, கூட்டமைப்பில் சேருவதற்கு ஏன் ஆசைப்பட்டாய் அதனால்தான் இப்படி செய்கிறேன்.”

என்று உக்ரைன் அதிபர் செலன்ஸ்கீயைப் பார்த்து சொல்லாமல் சொல்லிவிட்டு, தான்மட்டும், பத்திரமான இடத்தில் இருந்து கொள்வோம்! தன் நாட்டு மக்கள் மாத்திரம் பாதுகாப்பாக இருந்து உலக வாழ்வை அனுபவித்துக் கொள்வோம், என்று நோக்கில் அப்பாவி மக்கள் உடமைகளை குண்டு மழை பொழிந்து 60 இலட்சம் உக்ரைன் நாட்டவரை உலகெங்கும் சிதறடித்த பெருமைக்குச் சொந்தக்காரர்தான் இந்த புடின்!

உறவையிழந்து, உடமைகளை இழந்து, வாழ்வாதாரத்தை இழந்து, வேலையை இழந்து, மொத்தத்தையும் இழந்த மக்களின் அதிபர் செலன்ஸ்கி ஒருபுறம்.

ஒன்றுமே நடக்காதது போன்று, அயல் நாட்டை சிதறடிக்கும் அதே வேளையில், தன் நாட்டு மக்களுடன் விழாக் கொண்டாடி மகிழும் வளாடிமிர் புடின் மறுபுறம்!

உலக மக்களுக்கு ஒரு எச்சரிக்கை!

“இனி காலம் செல்லாது” என்று பைபிள் கடைசி காலத்தில் நேரப் போவதைப் பற்றிச் சொல்வது நினைவுக்கு வருகிறது!

# உலக முடிவு பற்றி இயேசு சொன்னது...!



ஒலிவ மலைமீது இயேசு அமர்ந்திருந்தபோது சீடர்கள் அவரிடம் தனியாக வந்து, “உமது வருகைக்கும் உலக முடிவுக்கும் அறிகுறி என்ன எங்களுக்குச் சொல்லும்” என்று கேட்டார்கள்.

அதற்கு இயேசு கூறியது:

“உங்களை யாரும் நெறிதவறச் செய்யாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில், பலர் என் பெயரை வைத்துக் கொண்டு வந்து, ‘நானே மெசியா’ என்று சொல்லிப் பலரை நெறி தவறச் செய்வர்.

“போர் முழக்கங்களையும் போர்களைப்பற்றிய செய்திகளையும் கேட்கப் போகிறீர்கள். ஆனால், திடுக்கிடாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள். இவை நிகழத்தான் வேண்டும். ஆனால், இவையே முடிவாகா. நாட்டை எதிர்த்து நாடும் அரசை எதிர்த்து அரசும் எழும்.”

“பல இடங்களில் பஞ்சமும் நில நடுக்கங்களும் ஏற்படும். இவையனைத்தும் பேறுகால வேதனைகளின் தொடக்கமே”

“பின்பு, உங்களைத் துன்புறுத்திக் கொல்வதற்கென ஒப்புவிப்பர். என் பெயரின் பொருட்டு எல்லா மக்கள் இனத்தவரும் உங்களை வெறுப்பர். அப்பொழுது பலர் நம்பிக்கையை இழந்துவிடுவர்; ஒருவரையொருவர் காட்டிக்கொடுப்பர்; ஒருவரையொருவர் வெறுப்பர்”

“பல போலி இறைவாக்கினர் தோன்றிப் பலரை நெறிதவறி அலையச் செய்வர். நெறிகேடு பெருகுவதால் பலருடைய அன்பு தணிந்துபோகும். ஆனால், இறுதிவரை மன உறுதியுடன் இருப்பவரே மீட்புப் பெறுவர்”

“உலகமெங்கும் உள்ள எல்லா மக்களினத்தாரும் ஏற்றுக்கொள்ளுமாறு விண்ணரசைப்பற்றிய இந்நற்செய்தி உலகமெங்கும் அறிவிக்கப்படும். அதன் பின்பு முடிவு வரும்.”

வரப்போகும் அந்திகிறிஸ்து பற்றியும் யேசு கூறினார்:

“யூதேயாவில் உள்ளவர்கள் மலைகளுக்குத் தப்பி ஓடட்டும். வீட்டின் கீழே இறங்கித் தம் வீட்டிலிருந்து எதையும் எடுக்காது ஓடட்டும். வயலில் இருப்பவர் தம் மேலுடையை எடுக்கத் திரும்பி வரவேண்டாம். அந்நாள்களில் கருவுற்றிருப்போர் பாலூட்டுவோர் ஆகியோரின் நிலைமை அந்தோ பரிதாபம்!”

“குளிர்காலத்திலோ ஓய்வு நாளிலோ நீங்கள் ஓடவேண்டிய நிலை ஏற்படாதிருக்க இறைவனிடம் வேண்டுங்கள். ஏனெனில்,

TN/ 65270/96



அப்போது பெரும் வேதனை உண்டாகும். உலகத் தோற்றமுதல் இந்நாள்வரை இத்தகைய துன்பம் உண்டானதில்லை;"

"இனிமேலும் உண்டாகப் போவதில்லை. அந்நாள்கள் குறைக்கப் படா விட்டால் எவரும் தப்பிப் பிழைக்கமுடியாது. எனவே, தாம் தேர்ந்துகொண்டவர்களின் பொருட்டுக் கடவுள் அந்நாள்களைக் குறைப்பார். அப்பொழுது யாராவது உங்களிடம், 'இதோ, மெசியா இங்கே இருக்கிறார்! அதோ, அங்கே இருக்கிறார்' எனச் சொன்னால் நீங்கள் நம்ப வேண்டாம்"

"ஏனெனில், போலி மெசியாக்களும், போலி இறைவாக்கினர்களும் தோன்றி, முடியுமானால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களையே நெறி தவறச் செய்ய பெரும் அடையாளங்களையும் அருஞ் செயல்களையும் செய்வார்கள். இதை முன்னதாகவே நான் உங்களுக்குச் சொல்லி விட்டேன்"

"ஆகையால், எவராவது உங்களிடம் வந்து, 'அதோ, பாலைநிலத்தில் இருக்கிறார்' என்றால் அங்கே போகாதீர்கள்; 'இதோ, உள்ளறையில் இருக்கிறார்' என்றால் நம்பாதீர்கள். ஏனெனில், மின்னல் கிழக்கில் தோன்றி மேற்குவரை ஒளிர்வது போல மானிட மகனின் வருகையும் இருக்கும். பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் கூடும்."

"துன்பநாள்கள் முடிந்த உடனே கதிரவன் இருண்டுவிடும்; நிலா தன் ஒளி கொடாது; விண்மீன்கள் வானத்திலிருந்து விழும்; வான்வெளிக்கோள்கள் அதிரும்."

"பின்பு வானத்தில் மானிட மகன் வருகையின் அறிகுறி தோன்றும். அப்போது மிகுந்த வல்லமையோடும் மாட்சியோடும் மானிட மகன் வானத்தின் மேகங்களின்மீது வருவார். இதைக் காணும் மண்ணுலகிலுள்ள எல்லாக் குலத்தவரும் மாரடித்துப் புலம்புவர்.அவர் தம் தூதரைப் பெரிய எக்காளத்துடன் அனுப்புவார். அவர்கள் உலகின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை நான்கு திசைகளிலிருந்தும் தேர்ந்துகொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச் சேர்ப்பார்கள்."

* * * * * * * * * * * *

உலகத்தின் கடைசிக் காலத்தில் என்ன சம்பவிக்கும் என்பது பற்றி இயேசு கூறியதை மேலே பார்த்தோம்.

அதற்குமுன்பு, உக்ரைனில் என்ன நடக்கிறது என்று பார்த்தோம். அதில் அன்பைப் போதித்த இயேசுவை வணங்குகிறேன் என்று கூறிக் கொண்டு, ஒரு புறம் குண்டுமழை மறு புறம் ஈஸ்டர் தின ஆலய பிரவேசம் என்று நாடகமாடிய புட்டினையும் பார்த்தோம்.

இப்போது இயேசு சொன்னதையும் ஒப்பிடுவோம்.

## "இது ஆரம்பம்தான்"

## உக்ரைன்... ஓர் எச்சரிக்கை தான்!

## உஷார் மக்களே...!

Owned and published by M.Xavier chandrakumar from 1/448. Pillaiyar Koil Street, Kelambakkam, Chengalpet. 603 103 TN. and Printed by Syed Azamadullah. at Sharp Printers. 324 Triplicane High Road. Chennai-600 005. Editor M.Xavier chandrakumar



**Divine Mercy Church**, Kelambakkam


Jesus, I Trust In You